வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 20/=

ஈழநாடு

Eelanadu

MARUTHI MONEY EXCHANGE

மாருதி Money Exchange (Pvt) Ltd.

இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 021 221 4433

076 284 4443

இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06

T.P: 011 236 2086

இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

MoneyGram மனிகிராம் பணப்பரிமாற்றம்

Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்

WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk மலர் : 03 11.02.2022 வெள்ளிக்கிழமை இதழ் : 68 பக்கங்கள் : 16

# இந்திய நிகழ்ச்சி நிரலில் நடக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி!

## வடக்கு கடற்றொழிலாளர் இணையம் குற்றச்சாட்டு



யாழ்ப்பாணம், பெப்ரவரி 11

**தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர், இந்தியாவின் நிகழ்ச்சி நிரலின் கீழ் செயற்படுகின்றனர் என்பது அம்பலமாகியுள்ளது என வடக்கு மாகாண கடற்தொழிலாளர்கள் சங்கங்களின் இணையத் தலைவர் என்.வி. சுப்பிரமணியம் தெரிவித்தார்.**

15



## யாழ்.பல்கலைக்கழக ஊழியர்கள் நேற்று ஒருநாள் வேலைநிறுத்தம்

யாழ்ப்பாணம், பெப். 11

அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்க கூட்டுக் குழுவின் அழைப்பின் பெயரில் யாழ்.பல்கலைக்கழகத்திலும் ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம் நேற்று

15

## தனிமைப்படுத்தல்காலம் இனி 7 நாட்கள் மட்டுமே!

கொழும்பு, பெப். 11

கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட நபரின் தனிமைப்படுத்தல் காலத்தை 7 நாட்களாக குறைக்கத் தீர்மானித்துள்ளதாக சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொரோனாவால் பாதிக்கப்பட்ட நபருக்கு முதல் ஐந்து நாட்களே தொற்று கடுமையானதாக இருக்கும், அடுத்து வரும் இரண்டு நாட்கள்

15

## பயங்கரவாத சட்ட திருத்தம் நேற்று சபையில் சமர்ப்பிப்பு!

கொழும்பு, பெப். 11

1979ஆம் ஆண்டு 48ஆம் இலக்க பயங்கரவாத தடைச் சட்டத்தை திருத்துவதற்கான சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை வெளிவிவகார அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் முன்வைத்தார்.

வெளிவிவகார அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் பயங்கரவாத தடைச் சட்டத்தை திருத்துவதற்கான சட்டமூலத்தை முன் வைத்தபோது, ஐரோப்பிய ஒன்றியம் - இலங்கை கூட்டு ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ள குறைபாடுகளில் திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பான உறுதி மொழிகள் சட்டமூலத் தில்

15

### மீனவர்களின் பாதுகாப்பு விடயத்தில்

## சொந்த நாடு அமைதியாயிருக்க இந்தியா எமக்கு உறுதி தருகிறது!

### சபையில் கஜேந்திரகுமார் எம். பி.

கொழும்பு, பெப். 11

சொந்த நாட்டு மீனவர்களின் பாதுகாப்பு குறித்து உத்தரவாதப்படுத்த வேண்டிய இலங்கை அரசு எந்த உத்தரவாதமோ வாக்குறுதியோ வழங்காதிருக்க , வடக்கு மீனவர்களின் பிரச்னைகள் குறித்து இந்தியா நேரடியாக எமக்கு உறுதிமொழி வழங்குகின்றது.

எனவே, எமது மீனவர்களின் அழிவுக்கு இலங்கை கடற்படை

15

## கொரோனாவுக்கு 31 பேர் உயிரிழப்பு

கொழும்பு, பெப். 11

நாட்டில் நேற்றுமுன்தினம் கொரோனா தொற்றால் மேலும் 31 பேர் உயிரிழந்தனர் என்று அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் 30 - 59 வயதுப் பிரிவில் 2 ஆண்களும், 3 பெண்களுமாக 5 பேரும், 60

15

## பயங்கரவாத தடை சட்டத்தை முழுமையாக மாற்றவேண்டும்

### சுமந்திரன் எம். பி. சபையில் வலியுறுத்து

கொழும்பு, பெப். 11

பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் 300- 400 பேர் தற்போதும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் குறித்து எவரும் பேசுவதில்லை. ஒருசிலரின் வழக்குகளே எப்போதும் பிரபல்யமாக பேசப்பட்

15

## மஹிந்த விடுத்த சவாலை ஏற்றது ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, பெப். 11

“தேர்தல் தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ விடுத்த சவாலை நாம் ஏற்கின்றோம். எனவே, உள்ளாட்சி மன்றத் தேர்தலை விரைவில் நடத்தவும்.” - என்று ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடை பெற்ற ஊடக சந்திப்பின்போதே அந்தக் கட்சியின் ஊட கப் பேச்சாளரான எஸ்.எம்.

15




## வவுனியா பல்கலைக்கழகத்தின் கல்வெட்டில் திடீரென மாற்றம்!

வவுனியா, பெப். 11

வவுனியா பல்கலைக்கழகத்தின் திரைநீக்கப் பகுதியில் இருந்த தமிழ்மொழி கல்வெட்டில் திடீர் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வவுனியா பல்கலைக்கழகத்துக்கு இன்று விஜயம் செய்யும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ

15

## அரச தாதியர் பகிஷ்கரிப்புக்கு நீதிமன்றம் இடைக்கால தடை

கொழும்பு, பெப். 11

அரச தாதியர் சங்கம் மேற்கொண்டுள்ள பணிப் பகிஷ்கரிப்பை தொடர்ந்து முன்னெடுப்பதை தடுக்கும் வகையில் நீதிமன்றம் இடைக்கால தடையுத் தரவு பிறப்பித்துள்ளது.

அரச தாதியர் சங்கம் மற்றும் அதன் தலைவர் சமன் ரத்னபிரிய ஆகியோருக்கு எதிராக சட்டமா அதிபர், மேற்படி சங்கத்தின் தொழிற்சங்க நடவடிக்கையை உடனடியாக இடை நிறுத்துமாறு நீதிமன்றத்திடம் உத்தரவு

15

## கிடைக்கும் முதல் சந்தர்ப்பத்தில் நிச்சயமாக தேர்தல் நடத்தப்படும்

### அமைச்சர் நாமல் ராஜபக்ஷ உறுதி

கொழும்பு, பெப். 11

“தேர்தலை ஒத்திவைக்கும் நோக்கம் அரசுக்கு இல்லை. கிடைக்கும் முதல் சந்தர்ப்பத்திலேயே நிச்சயம் தேர்தல் நடத்தப்படும். அதனை எதிர் கொள்வதற்கு நாம் தயார்.” - என்று அமைச்சர்

15

## இப்படியும் நடக்கிறது...!

நேற்றைய தினம் இந்தப் பத்தியில் மறவன்புலவு சச்சிதானந்தம் அவர்களின் கேள்வி ஒன்றின் நியாயம் குறித்து எழுதியிருந்தேன்.

அதனைப் படித்துவிட்டு கனடாவிலிருந்து ஊடக நண்பர் ஒருவர் சற்று கோபத்துடனேயே தொலைபேசி இணைப்பில் வந்தார்.

“ஈழநாடு, இப்படி கிறிஸ்தவத்திற்கு எதிராக செயல்படுவது அதன் பாரம்பரிய பண்புகளுக்கு இழுக்கு” என்று எடுத்த எடுப்பில் என்மீது பாய்ந்தார்.

ஈழநாடு எந்தக் கட்டத்திலுமே கிறிஸ்தவத்திற்கு எதிராக எதையும் எழுதியதில்லையே, ஏன் இப்படிச் சொல்கிறீர்கள் என்று கேட்டேன்.

மறவன்புலவின் கருத்துக்களோடு உடன்பாடு இல்லை என்று திரும்பத்திரும்பக் கூறிக்கொண்டு, அவரது கருத்துக்களை சரி என்றும் எழுதிக்கொண்டிருக்கிறீரே என்றார் அவர்.

இந்த ஊர்க்குருவி சிறுவனாக இருந்த காலத்தில் - அரைக்காற் சட்டைக் காலத்தில், நாங்கள் சைக்கிள்களில் போய்க்கொண்டிருக்கும்போது எமது கிராமத்தில் கத்தோலிக்க பாதிரியார், எதிரே சைக்கிளில் வருவார். அப்போதெல்லாம் கத்தோலிக்க குருவானவர்கள் இன்றைய காலங்களைப் போல மோட்டார் சைக்கிள்களில் செல்வதில்லை.

எதிரே குருவானவர் வருவதை கண்டதும், அவர் அருகே வருகின்றபோது, நாங்கள் எமது சைக்கிளிலிருந்து இறங்கி நின்றுகொண்டு ‘குட்மோனிங் பாதர்’ என்போம். அவ்வளவு மரியாதையும் பக்தியும் அவர்மீது இருக்கும். ஆனால், சைவர்களான நாங்கள் அதே வீதியில் வருகின்ற எமது சைவக் குருவானவர்களை கண்டுகொள்வதில்லை.

இந்த நினைவுகள் இன்றும் இந்த ஊர்க்குருவிக்கு உண்டு. ஊர்க்குருவிக்கு மாத்திரமல்ல, ‘ஈழநாடு’ம் எந்த மதத்திற்கும் எதிரானது அல்ல.

ஆனால், இன்று யாழ்ப்பாணத்தின் மூலை முடுக்குகள் எங்கும் புனிதர் யேசுவின் பெயரில் பல்வேறு புதிய புதிய குழுக்கள் முளைக்கத் தொடங்கியிருக்கின்றன.

மக்களை அவர்களின் பலவீனங்களை அறிந்து அவற்றை தீர்க்கிறோம், அதற்கு நாங்கள் உதவிபுரிகின்றோம் என்ற பெயரில் இன்று நடக்கும் மதமாற்ற முயற்சிகள் ஏற்புடையதல்ல.

ஒரு காலத்தில் திருநீறு அணிவதை கத்தோலிக்கர்கள் தவிர்த்ததுண்டு. இன்று தைப்பொங்கல் திருநாளை கத்தோலிக்க தேவாலயங்களில் கொண்டாடுகின்ற அளவிற்கு நிலைமைகள் மாறிவிட்டன. காரணம், தமிழர்களின் கலாசார - பண்பாட்டு விழுமியங்களை கத்தோலிக்கம் மத நிகழ்ச்சியாக இப்போது பார்ப்பதில்லை.

ஆனால், இந்த மதமாற்ற குழுக்கள், தமிழர்களின் பண்பாட்டு பாரம்பரியங்களைக்கூட, தாலிகட்டுவது, பொட்டு வைப்பது சாத்தான்களின் வேலை என்பது போல பிரசாரம் செய்வதும், அதனை நம்மவர்கள் பின்பற்ற முனைவதும் மிகவும் ஆபத்தானவை.

ஓர் இனத்தின் பண்பாடும் கலாசாரமும் அழிந்துவிடுமானால், அது முகமற்ற சமுதாயமாக மாறிவிடும்.

அத்தகைய பிரசாரம் இன்று நமது அரசியல் தலைவர்களையே மாற்றியிருக்கின்றது என்றால், அவர்களே இன்று எமது தலைவர்களாக இருக்கிறார்கள் என்றால், அதனை அனுமதிக்கச் சொல்கிறீர்களா? என்று அந்த கனடா நண்பரிடம் கேட்டேன்.

அதற்கு அவரிடம் பதில் இருக்கவில்லை!

அப்போது, கத்தோலிக்கரான அந்த ஊடக நண்பர், இந்தப் பிரச்னை உங்களுக்கு மட்டும் உரியதல்ல, அதாவது சைவர்களுக்கு மட்டும் உரியதல்ல, நாங்கள் றோமன் கத்தோலிக்கர்களும் இதுபோன்ற சபைகளால் பாதிக்கப்படுகின்றோம். யாழ்ப்பாணத்தில் நிலைமை இப்படியே போனால், கத்தோலிக்க தேவாலயங்களில் வழிபடுவதற்கே ஆட்கள் இருக்கப்போவதில்லை என்று சலித்துக்கொண்டார்.

- ஊர்க்குருவி

# கடன், கையிருப்பு விவரங்களை மாதந்தோறும் அறிக்கையிடுக!

### ரணில் பாராளுமன்றில் அறிவுறுத்து



கொழும்பு, பெப்.

நாட்டின் அரச கடன் மற்றும் வெளிநாட்டு நாணயக் கையிருப்பு தொடர்பான தகவல்கள் அடங்கிய அறிக்கையை ஒவ்வொரு மாதமும் பாராளுமன்றத்தின் அரச நிதி தொடர்பான தெரிவுக் குழுவில் முன்வைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும் போதே ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு கூறினார்.

மேலும், அரசியலமைப்பில் 148 ஆம் இலக்க உறுப்புரிமையில் இந்த பாராளுமன்றத்திற்கே அரச நிதிநிர்வாக அதிகாரம் உள்ளது. இதன்படி அரச நிதிகள் தொடர்பான தெரிவுக் குழுவில், சகல மாதங்களிலும் பாராளுமன்றம் கூடும் முதல் வாரத்தில் அரச கடன் தொடர்பிலும் கடன் சேவைகள் தொடர்பிலும் அறிக்கையை சமர்ப்பிக்குமாறு கேட்கின்றேன்.

அத்துடன், அரசாங்கத்தின் நாணய இருப்பு தொடர்பிலும் கூறப்பட வேண்டும். இந்நிலையில், தற்போது முன்வைக்கப்படும் நாணய இருப்புகள் தொடர்பான தகவல்களில் சீனா, இந்தியாவில் இருந்து கொடுக்கும் கடன்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவை தனியாகவே வழங்க வேண்டும். தற்போது ஒரு பில்லியன் டொலரை விடவும் குறைவான தொகையே தற்போது இருப்பில் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

இதனால் ஒவ்வொரு மாதமும் இது தொடர்பான தகவல்களை வழங்கினால் அரச நிதியின் நிலைத் தன்மையை பேணலாம்.

இதேவேளை சர்வதேச நாணய நிதியமும், இலங்கை அரசாங்கமும் கலந்துரையாடிய விடயங்கள் தொடர்பான அறிக்கையை இந்த சபையில் சமர்பிக்குமாறும் நாங்கள் கேட்கின்றோம் - என்றார்.

# உரும்பிராய் சந்தியில் விபத்து சிப்பாய் உட்பட மூவர் காயம்!

யாழ்ப்பாணம், பெப். 11

உரும்பிராய் சந்தியில் அடுத்தடுத்து இடம்பெற்ற விபத்துக்களில் இரண்டு இளைஞர்களும், இராணுவச் சிப்பாய் ஒருவரும் காயமடைந்துள்ளனர். நேற்று பகல் அடுத்தடுத்து இந்த விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன.

பலாலி வீதியால் மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு இளைஞர்களும், மருதனார்மட பக்கமிருந்து சென்ற கடற்படை வாகனமும் மோதி விபத்திற்குள்ளானது. இதில் இரண்டு இளைஞர்களும் காயமடைந்தனர்.

விபத்தையடுத்து, உரும்பிராய் சந்தியில் கடமையிலிருந்த இராணுவச்சிப்பாய் அந்த இடத்திற்கு சென்று பார்த்த போது, பின்னால் வந்த கார் ஒன்று சிப்பாயை மோதித்தள்ளியது. இதில் சிப்பாயின் கால் முறிந்தது.

காயமடைந்த 3 பேரும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஐ)

# இந்திய படகுகளை ஏலமிடுதல் தலைமன்னாரில் இடைநிறுத்தம்

மன்னார், பெப். 11

தலைமன்னார் பியர் இறங்குதுறையில் நேற்று வியாழக்கிழமை மதியம் இந்திய மீனவர்களின் படகுகள் ஏல விற்பனை செய்ய அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் ஏல விற்பனையில் கலந்து கொண்டு படகுகளை கொள்வனவு செய்ய மன்னார், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு உள்ளடங்கலாக நாட்டின் பல பாகங்களில் இருந்தும் சுமார் 30 இற்கும் மேற்பட்ட கொள்வனவாளர்கள் தலைமன்னார் பியர் இறங்கு துறை பகுதிக்கு வருகை தந்திருந்தனர்.

எனினும் அறிவிக்கப்பட்டது போன்று ஏல விற்பனை இடம்பெறவில்லை என வருகை தந்த கொள்வனவாளர்கள் தெரிவித்தனர். நேற்று காலை முதல் மதியம் வரை ஏல விற்பனைக்காக காத்திருந்த போதும் இறுதி நேரத்திலேயே குறித்த ஏல விற்பனை இடம்பெறாது என அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் தூர இடங்களில் இருந்து வருகை தந்த கொள்வனவாளர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர். (ஐ)

# வடக்கில் 12 பேருக்கு கொரோனா

யாழ்ப்பாணம், பெப். 11

யாழ்ப்பாணத்தின் ஆய்வு கூடங்களில் நேற்று நடத்தப்பட்ட பரிசோதனைகளில் 12 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று 14 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் 3 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதேபோல் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் 9 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதில், யாழ். போதனா மருத்துவமனையில் 4 பேருக்கும், சென்றல் நொதேர்ன் தனியார் மருத்துவமனையில் இருவருக்கும், கிளிநொச்சி பொது மருத்துவமனையில் இருவருக்கும், முழங்காவில் கடற்படை முகாமில் இருவருக்கும், இரணைமடு விமானப்படை முகாமில் இருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டது. (ஐ)

# நோயிலிருந்து மீள பிரார்த்தனை பத்து வயது சிறுவன் உயிரிழப்பு!

கொழும்பு, பெப். 11

10 வயதான சிறுவன் மர்மமான முறையில் மரணமடைந்த சம்பவம் தொடர்பில், அந்தச் சிறுவனின் தாய், தந்தை மற்றும் பாட்டி ஆகிய மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நீர்கொழும்பு, படல்கம ஆண்டிபொலவில் உள்ள வீட்டில் இருந்து சிறுவனின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

அந்த வீட்டில் துர்நாற்றம் வீசுவதாக, கிடைத்த தகவலை அடுத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போது, அவ்வீட்டின் அறையொன்றுக்குள் இருந்து சிறுவனின் சடலம் நேற்று முன்தினம் மாலை மீட்கப்பட்டுள்ளது.

தொண்டையில் சளி சிக்கியமையால், அந்தச் சிறுவன் கடந்த 7ஆம் திகதியன்று நோய்வாய்ப்பட்டுள்ளார்.

அந்த நோயை சுகப்படுத்துவதற்காக அவருடைய பெற்றோர், தாங்கள் நம்பும் சமயத்தின் அடிப்படையில் தியானம் செய்துள்ளனர்.

அந்த தியானத்தின்போதே சிறுவன் மரணமடைந்தார். எனினும், அவரை உயிர்பிப்பதற்காக, தொடர்ச்சியாக தியானம் செய்துள்ளனர் என்றும் விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

அவரை சுகப்படுத்துவதற்கு வைத்தியசாலையில் சேர்க்கவில்லை. இந்நிலையிலேயே தாய், தந்தை மற்றும் பாட்டி ஆகிய மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கைது செய்யப்பட்ட மூவரையும் நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

Eelanadu ஈழநாடு
11.02.2021 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், தை 29

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 730 1370**

# தமிழ் அரசியலில் பூமராங்?

தமிழ் தேசிய அரசியல் வரலாற்றில் பல்வேறு சந்தர்ப்பங்களில் சிலரால் சிலரும், பலரால் பலரும், துரோகிகளாக்கப்பட்ட வரலாற்றை தமிழ் மக்கள் கண்டிருக்கின்றனர். இதில், எது உண்மை – எது பொய் என்பதற்கு வரலாற்றில் எவ்வித சான்றுகளும் இல்லை. ஒரு குறிப்பிட்ட சூழலில் – துரோகிகளாக சித்திரிக்கப்பட்டவர்கள் பிறிதொரு காலத்தில் போற்றப்பட்டதுண்டு. அதேபோன்று ஒரு குறிப்பிட்ட காலத்தில் தியாகிகளாக கொண்டாடப்பட்டவர்கள் பிறிதொரு காலத்தில் தூற்றப்பட்டதுமுண்டு. "போற்றுவார் போற்றலும் தூற்றுவார் தூற்றலும் போகட்டும் கண்ணனுக்கே" – என்பது போல் அனைத்து தூற்றுதலுக்கும் போற்றுதலுக்கும் சாதாரண மக்களே சாட்சிகளாக இருக்கின்றனர்.

துரோகி, தியாகி, முகவர், காட்டிக்கொடுப்பாளர் – இவ்வாறான சொற்களுக்கு தமிழ் அரசியலில் எவ்வித பெறுமதியும் இருந்ததில்லை. ஏனெனில், சாதாரண மக்களின் நன்மைகளை கருத்தில் கொண்டு இவ்வாறான சொற்கள் பயன்படுத்தப்படுவதில்லை. மாறாக, தங்களின் அரசில் எதிரிகளை சோர்வடையச் செய்யவும் அவர்கள் நடத்தையை மக்கள் மத்தியில் படுகொலை செய்வதற்காகவுமே இவ்வாறான வசைச் சொற்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இவ்வாறான சொற்களை எவரெல்லாம் அதிகம் பயன்படுத்துகின்றார்களோ – அவர்களை மிக விரைவாகவே அவர்களது சொற்களே அவர்களை நோக்கி வருவதை காண்கின்றனர். ஏனெனில், துரோகி – எட்டப்பர், முகவர் போன்ற சொற்கள் பூமராங் போன்றது. அது எறிந்தவர்களை விரைவில் தாக்கவல்லது.

இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் அனுப்பியவர்களை தமிழ் தேசிய முன்னணியினர் இந்தியாவின் முகவர்களென்றும் அடிமைகளென்றும் ஆவேசமாக பேசியிருந்தனர். ஆனால், சில நாட்களிலேயே, அவர்கள் கூறியது, அவர்களை நோக்கி வந்திருக்கின்றது. வடக்கு மாகாண கடற்தொழிலாளர் சம்மேளனத்தின் இணை தலைவர், என். வி. சுப்பிரமணியம் – தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இந்தியாவின் நிகழ்ச்சிநிரலின் கீழ் இயங்கும் ஒரு கட்சியென்று குறிப்பிட்டிருக்கின்றார். தாம் கொண்டுவரவிருந்த இழுவைமடி தொடர்பான தனிநபர் பிரேரணையை இந்திய தூதரக அதிகாரி ஒருவரது வேண்டுகோளுக்கு இணங்க கைவிட்டதாக முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்தே கடற்றொழிலாளர் சம்மேளனத்தின் செயலாளர் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார். ஆனால், இந்திய தூதரக அதிகாரி செல்வராசா கஜேந்திரனுக்கு அறிவுறுத்தினாரா என்பதற்கு எந்தவோர் ஆதாரங்களும் இல்லை. ஆனால், அவர்கள் கொண்டு வரவிருந்ததாக கூறப்படும் பிரேரணையை கொண்டுவரவில்லை. அதற்கு இப்போது சொல்லப்படும் காரணம் – இந்தியா.

இந்திய வெளியுறவுச் செயலாளர் ஆகக் குறைந்தது, 13ஆவது திருத்தச்சட்டத்திலாவது அனைத்து தமிழ் கட்சிகளும் ஒன்றாக நிற்க வேண்டுமென்று வலியுறுத்தியிருந்தார். இதேவேளை புதிய அரசியல் யாப்பின் மூலம் – ராஜபக்ஷக்கள், மாகாண சபை முறைமையையும் இல்லாமலாக்கலாம் என்னும் நிலைமையும் காணப்படுகின்றது. இவ்வாறானதொரு சூழலில்தான் ஆறு கட்சிகள் ஒரு தந்திரோபாய நடவடிக்கையாக இந்திய பிரதமருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தன. அதில் 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டுமென்று வலியுறுத்தியிருந்தன. அதனையே இந்தியாவுக்கான முகவர் வேலையென்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் விமர்சித்தனர். இந்தியா வலியுறுத்தி 13ஐக் கோருவது முகவர் வேலையென்று கூறியவர்கள், இப்போது, இந்திய அதிகாரி ஒருவரின் கோரிக்கைக்காக பிரேரணை கைவிடப்பட்டதாக கூறுகின்றனர். நேற்றைக்கும் இன்றைக்கும் மக்களே சாட்சி.

# பயங்கரவாத தடைச்சட்டத்தின் அழுத்தங்களை இன்றுவரை அனுபவிக்கும் வடக்கு - கிழக்கு மாகாணங்கள்!

**-அலசுவது இராஜதந்திரி-**

இலங்கையில் பயங்கரவாத தடைச் சட்டம் கொண்டுவரப்பட்ட காலம் முதல் அதனால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் வடக்கு - கிழக்கு பிரதேச மக்களே என்பது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் ஆட்சிக்காலத்தில் 1979ஆம் ஆண்டு ஒரு தற்காலிக சட்டமாக பயங்கரவாத தடைச் சட்டம் கொண்டுவரப்பட்டிருந்தது. இதன் பின்னர் ஒரு முழுமையான சட்டமாக பயங்கரவாத தடைச்சட்டம் 1982ஆம் ஆண்டு மாற்றமடைந்திருந்தது.

பொலிஸாருக்கு சந்தேகநபர்கள் என்று கருதப்பட்டவர்களை கைது செய்யவும், தேடுதல் நடவடிக்கைகளை எவ்விடத்திலும், எவ்வேளையிலும் மேற்கொள்ளவும் கைதானவர்களை காலவரையின்றி தடுத்து வைக்கவும் பயங்கரவாத தடைச்சட்டம் இடமளிக்கின்றது.

புலனாய்வுத்தகவல்களின் அடிப்படையில் அன்று தெற்கே மக்கள் விடுதலை முன்னணி (ஜே. வி. பி) மீளவும் தலையெடுக்க ஆரம்பித்ததை கவனத்திலெடுத்ததாகவும், வடக்கு - கிழக்கில் ஆயுதப் போராட்டம் துளிர்விட ஆரம்பித்ததையும் கருத்தில் கொண்டதாகவுமே பயங்கரவாத தடைச் சட்டம் அமுலுக்கு வந்திருந்தது.

தெற்கில் எண்பதுகளின் நடுப்பகுதியல் மீளவும் மக்கள் விடுதலை முன்னணி(ஜே. வி. பி.) தனது கைவரிசையைக் காண்பிக்க முன்வந்திருந்தது. இதன்காரணமாக ஏராளமான சிங்கள இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு பலதரப்பட்டவகையிலும் துன்புறுத்தப்பட்டனர். ஆறுகள், குளங்கள், கடற்கரைகள் மற்றும் ஒதுக்குப்புறமான இடங்களிலெல்லாம் தென்னிலங்கை இளைஞர்கள் சடலங்களாக போடப்பட்டிருந்தனர்.

அதேசமயம், வடக்கு-கிழக்கில் பொலிஸார் கொல்லப்பட்டும், பொலிஸ் நிலையங்கள் தாக்கப்பட்டும் வடக்கு-கிழக்கில் தீவிரவாத நட வடிக்கைகள் கொலைகள், வங்கிக் கொள்ளைகள், மின்கம்ப மரண தண்டனைகள் என சட்டம் - ஒழுங்கு நிலைதளர ஆரம்பித்திருந்தது.

தற்போது, மீன்பிடித்துறை அமைச்சராக இருக்கின்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூட பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் கைதாகி வெலிக்கடைச் சிறையில் வைக்கப்பட்டிருந்தார். இதன்பின்னர் அங்கே இடம்பெற்ற 1983ஆம் ஆண்டு ஜூலை சிறைக் கலகத்தின்போது உயிர் தப்பியதோடு பின்னாளில் சிறையுடைப்பொன்றில் தமிழகத்துக்கு தப்பிச்சென்றிருந்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைப் போன்றே ஏராளமான இளைஞர், யுவதிகள் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதாகியிருந்தனர். இதன்பின்னர் இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சானதையடுத்து பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதாகியிருந்தவர்களில் அநேகர் விடுதலையாகியிருந்தனர்.

பயங்கரவாத தடைச்சட்டம் பல விசேட அதிகாரங்களை பொலிஸாருக்கு வழங்கிய தன் காரணமாக ஏராளமான இளைஞர்கள் வடக்கு - கிழக்கில் கைதான அதேசமயம், நாளடைவில் அந்த விசேட அதிகாரங்கள் ஆயுதப் படையினருக்கும் கிடைத்திருந்தன. இதன் காரணமாக நிலமை மோசமடைய ஆரம்பித்திருந்தது.

வடக்கு - கிழக்கில் ஆயுதப் போராட்டங்கள் ஆரம்பமான காலகட்டத்தில் இலங்கைப் படையினருக்கு இஸ்ரேல், அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா போன்ற நாடுகள் பயங்கரவாத நடவடிக்கைகளை கையாளுவது சம்பந்தமாக விசேட பயிற்சிகளை வழங்கியிருந்தன.

அன்றையகால கட்டத்தில் வட அயர்லாந்தில் ஐரிஷ் குடியரசு இராணுவத்தின் அச்சுறுத்தல் காணப்பட்டிருந்தது. இந்தியாவில் பஞ்சாப் தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் காணப்பட்டிருந்தது. இஸ்ரேலில் பலஸ்தீன பிரச்னை மும்முரமாகியிருந்தது.

இந்நிலையில், இலங்கை ஆயுதப் படையினருக்கு பயங்கரவாத நடவடிக்கைகளை கையாளுவதில் தமக்கு ஏற்பட்ட அனுபவங்களின் அடிப்படையில் இஸ்ரேல், இந்தியா, பிரிட்டன் ஆகிய நாடுகள் பயற்சிகளை வழங்கியிருந்தன.

பலஸ்தீன பிரச்னையை இஸ்ரேல் மிக மூர்க்கமாக கையாண்டிருந்தது. பலஸ்தீன கெரில்லா சந்தேகநபர்கள் என்று கண்டறியப்பட்டவர்கள் வீடுகளை குண்டு வைத்து தகர்த்திருந்தது.

இஸ்ரேலிய பாணியில் வடக்கே குறிப்பாக யாழ்ப்பாணத்தில் ஆயுதப்போராட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் தங்கியிருந்ததாக சந்தேகிக்கப்பட்ட வீடுகள் இராணுவத்தினரால் குண்டு வைத்து தகர்க்கப்பட் டன.

இதுதவிர, இன்றுவரை நீதி விசாரணைகளின்றி பல வருடகாலமாக தடுத்து வைக்கப்பட்டிருக்கின்ற தமிழ் அரசியல் கைதிகள்கூட பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதாகியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன், காணாமல் ஆக்கப்பட்டவர்களில் அநேகர்கூட பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட நிலையில்காணாமலாக்கப்படடவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய பின்னணியில் பயங்கரவாத தடைச்சட்டத்தில் திருத்தங்களை கொண்டுவர அரசு முன்வந்துள்ளது. பயங்கரவாத திருத்தச்சட்டத்தில் திருத்தங்களை அரசு மேற்கொள்ள முன்வந்திருப்பதற்கு சர்வதேச சமூகத்தின் அழுத்தங்களே முக்கிய காரணமென்பதை அறிய முடிகின்றது.

இம்மாத இறுதியில் ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபன மனித உரிமைகள் பேரவையின் 49ஆவது கூட்டத்தொடர் ஆரம்பமாகவுள்ள தருணத்தில் சர்வதேச சமூகத்தின் அழுத்தங்களிலிருந்து விடுபடும் விதத்திலேயே பயங்கரவாத தடைச்சட்டத்தில் திருத்தங்கள் என்ற புதிய கைவரிசையை காண்பிக்க இலங்கை அரசு முன்வந்துள்ளது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**பெப்ரவரி - 11 வெள்ளிக்கிழமை**
**பிலவ வருடம் - தை 29**
**நல்ல நேரம் : 9.00 - 10.30**
**ராகு காலம் : 10.30 - 12.00**
**திதி : அதிதி**




**மேடம்**
தவறு செய்வோருக்கு எதிராக குரல் உயர்த்துவீர்கள். இன்று நல்ல செய்தி ஒன்று வரும். உங்களின் புகழ் கூடும். உங்களது உழைப்புக்கேற்ற பலன் கிடைக்காத நிலை மாறும்.

**இடபம்**
ஆரோக்யத்தில் அக்கறை எடுப்பீர்கள். சுறுசுறுப்பான நாள். பணியிடத்தில் கண்டிப்புக் கலந்த நடவடிக்கை எடுப்பீர்கள். பொறுமையுடன் முன்னேறுவீர்கள். குழப்பங்கள் தீரும்.

**மிதுனம்**
எண்ணம் நிறைவேறும். பயங்கள் காணாமல் போகும். புதியவர்களின் அறிமுகம் கிடைக்கும். உங்களது கனவு நனவாகும். உங்களது எண்ணம் நிறைவேற பெரியோர் மூலம் வாய்ப்பு வரும்.

**கடகம்**
எதிலும் அவசரம் வேண்டாம். தந்தைக்கு நன்மை செய்வீர்கள். நியாயமான முயற்சியின் மூலம் நன்மை அடைவீர்கள். வாழ்க்கைத்துணை செய்யும் நல்ல செயல்களுக்கு துணை நிற்பீர்கள்.

**சிம்மம்**
கற்பனை பயங்கள் முடிவுக்கு வரும். அதிர்ஷ்டமான நாள். மற்றவர் எண்ணங்களுக்கு மதிப்பளிப்பீர்கள். நட்பு வட்டம் விரியும். உயர்ந்தோரின் நட்பு கிடைக்கும். கடன் அனுமதி கிடைக்கும்.

**கன்னி**
சுப நிகழ்ச்சிகளில் பங்கேற்பீர்கள். உங்களின் செல்வாக்கு கூடும். விமர்சனங்களை ஒதுக்கித் தள்ளுங்கள். பரபரப்பான நாள். யார் மீதும் தவறான பழியை சுமத்த வேண்டாம்.

**துலாம்**
விருந்தில் பங்கேற்பீர்கள். எதிர்பார்த்த நன்மை தேடிவரும். பேச்சிலும் செயலிலும் கவனமாக இருந்தால் இனிய நாள். குடும்பத்தில் நிம்மதி பிறக்கும். உறவினர் உங்களை தேடி வரக்கூடும்.

**விருட்சிகம்**
உங்களுக்கு நன்மை தரக்கூடிய மாற்றங்கள் உருவாகும். புதிய விஷயங்களில் ஈடுபடும் முன் அதிக கவனம் தேவை. இன்று எதிலும் கவனமாக செயல்பட்டு வெற்றி பெறுவீர்கள்.

**தனுசு**
மன நிம்மதி ஏற்படும். நண்பர்களுக்கு உதவி செய்வீர்கள். எதிர்பாராத நன்மைகள் விளையும். வியாபாரத்தில் குறைந்த லாபம் வரும். வீட்டைப் புதுப்பிப்பதை சற்று தள்ளிப்போடுவீர்கள்.

**மகரம்**
உற்சாகமான நாள். எதிர்பாராத லாபம் வரும்.வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் சீராக இருக்கும். எதிர்பார்த்துக் காத்திருந்த நல்ல செய்தி ஒன்று வரும்.

**கும்பம்**
பகை நீங்கும். எதிர்பாலினத்தினர் மூலம் நன்மை வரும். கடுமையான முயற்சியால் நினைத்த நன்மையை அடைவீர்கள். எப்போதோ முயன்ற விஷயத்துக்கு இன்று பலன் உண்டு.

**மீனம்**
பணியில் கவனத்துடன் இருங்கள். வழிபாட்டில் ஈடுபடுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். சுறுசுறுப்பாகச் செயல்படுவீர்கள். உங்களின் அந்தஸ்து உயரும்.

# பா.ஜ.க. அலுவலகம் மீது குண்டு வீச்சு!

*சென்னை, பெப். 11*

சென்னையில் தி.நகர் பகுதியில் உள்ள பா.ஜ.க. தலைமை அலுவலகத்தில் நேற்று அதிகாலை பெட்ரோல் குண்டு வீசப்பட்ட சம்பவம் பதற்றத்தை ஏற்படுத்தி உள் ளது. இதனால் அந்த பகுதியில் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

அதிகாலை 1.30 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவர் 3 பெட்ரோல் குண்டுகளை சரமாரியாக அலுவலகம் மீது வீசியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதில் பா.ஜனதா அலுவலக வளா கத்தில் உள்ள சுவர்கள், தரை ஆகியவை சேதம் அடைந்தன.

பெட்ரோல் குண்டு வீசப்பட்ட இடத்தில் தடயங்களை சேகரிப்பதற்காக தடயவியல் நிபுணர்களும் வர வழைக்கப் பட்டனர்.

அவர்கள் பா.ஜனதா அலுவலக வளா கத்தில் சிதறிக் கிடந்த பெட்ரோல் குண்டு பாகங்களை சேகரித்து அதனை ஆய்வு செய்தனர்.




இது தொடர்பில் ஒருவர் கைதாகியுள்ளார். நீட்தேர்வு தொடர்பாக பா.ஜனதாவின் நிலைபாட்டை எதிர்த்து 3 பெட்ரோல் குண்டுகளை வீசியதாக கைது செய்யப்பட் டவர் வாக்கு மூலம் அளித்து உள்ளார்.

பா.ஜனதா தலைமை அலுவலகத்தில் 24 மணிநேரமும் பொலிஸ் துகாப்பு போடப்பட்டு இருக்கும். துப்பாக்கி ஏந்திய காவலர்கள் சுழற்சி முறையில் பணியில் இருப்பார்கள். இந்த நிலையிலும் அங்கு அதிகாலை குண்டு வீசப்பட்டுள்ளது.

## பா.ஜ.க. காலடி வைத்தால் தமிழகத்தக்கு அபத்து

### எச்சரிக்கிறார் கனிமொழி

*சென்னை, பெப். 11*

தமிழகத்தில் பா.ஜ.க., காலடி வைத்தால் கர்நாடகா போல் ஆகிவிடும் என, திமுக., எம்.பி. கனிமொழி தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி நகராட்சியில் போட்டியிடும் தி.மு.க., மற்றும் கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவாக தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

அப்போது பேசிய அவர், “மதம் மற்றும் அடக்குமுறையின் பெயரால் கர்நாடகாவில் கலவரங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழகத்தில் பா.ஜ.க., காலடி வைக்கும் வாய்ப்பினை கொடுத்துவிட்டால் தமிழகமும் கர்நாடக மாநிலம் போல் ஆகிவிடக் கூடிய அபாயம் உள்ளது என்றார்.

தமிழர்களாகிய நாம் ஒற்றுமையாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அந்தப் பாதுகாப்பு உணர்வுடன் நாம் வாழ வேண்டும். நாணயத்தின் இரு பக்கங்கள் தான் பா.ஜ., கவும், அ.தி.மு.க.வும் இரண்டு பேரும் தமிழகத்திற்கு அவமானத்தையும், கேடையும் விளைவிக்கக் கூடியவர்கள். மக்களுக்கும் அரசுக்கும் பாலமாக இருக்கக் கூடிய வேட்பாளர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும்” என்றார்.

## ஸ்டாலின் தொடங்கிய சமூக நீதி கூட்டமைப்பிற்கு மதிமுக ஆதரவு

*சென்னை, பெப். 11*

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கிய அனைத்திந்திய சமூக நீதி கூட்டமைப்பிற்கு ஆதரவு தெரிவிப்பதாகவும் கூட்டமைப்பிற்கான கட்சி பிரதிநிதியையும் ம.தி.மு.க. நேற்று அறிவித்துள்ளது.

இதுகுறித்து அக்கட்சி வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

பிற்படுத்தப்பட்ட, பட்டியலின மற்றும் பழங்குடியின மக்களின் இட ஒதுக்கீடு உள்ளிட்ட நலன்களைப் பாதுகாத்திட, அனைத்திந்திய சமூக நீதி கூட்டமைப்பு தொடங்கப்படும் என்று தமிழக முதல்வரும் - தி.மு.க. தலைவருமான ஸ்டாலின் அறிவித்திருந்தார். இந்த அமைப்பில் இணைந்திட முன்வருமாறு 37 கட்சிகளின் தலைவர்களுக்கு, கடிதம் வாயிலாக அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த வரிசையில் கழகப் பொதுச்செயலாளர் வைகோ அவர்களுக்கு அழைப்பு விடுத்து மு.க.ஸ்டாலின் கடிதம் அனுப்பியுள்ளார். இதை ஏற்று, அனைத்திந்திய சமூக நீதிக் கூட்டமைப்பின் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பிரதிநிதியாக, கழகத்தின் தேர்தல் பணிச் செயலாளர் வழக்கறிஞர் ஆவடி அந்தரிதாஸ் செயல்படுவார் என அறிவித்து, முதல்வரின் முயற்சிகளுக்கு வரவேற்பையும், வாழ்த் தையும் தெரிவித்து பொதுச்செயலாளர் அவர்கள் முதல்வருக்கு கடிதம் எழுதியுள்ளார். இவ்வாறு ம.தி.மு.க. வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளது.

# வன்முறை சம்பவங்கள் அதிகரித்துள்ளது; புலனாய்வுப் பிரிவு விசாரிக்க வேண்டும்!

## கோரிக்கை விடுக்கின்றார் அண்ணாமலை

*சென்னை, பெப். 11*

சென்னை தி.நகர் வைத்தியராமன் தெருவில் உள்ள பாஜகவின் தமிழக தலைமை அலுவலகத்தில் பெட்ரோல் குண்டுகள் வீசப்பட்டது தொடர்பாக தேசிய புலனாய்வு பிரிவு விசாரிக்க வேண்டும் என்று தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து செய்தியாளர் சந்திப்பில் அண்ணாமலை பேசும்போது, “பா.ஜ.க. தலைமை அலுவலகத்தில் பெட்ரோல் குண்டு வீசப்பட்ட விவகாரம் குறித்து தேசிய புலனாய்வு பிரிவு விசாரிக்க வேண்டும். அப்போதுதான் இது போன்ற சம்பவங்கள் தமிழகத்தில் நடைபெறாமல் இருக்கும்.



இந்த பெட்ரோல் குண்டு வீச்சு விவகாரத்தில் யார் உண்மையான குற்றவாளிகள் என்று கண்டறியப்பட்டு அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். தி.மு.க. ஆட்சிக்கு வந்து 8 மாதம் காலத்தில் வன்முறை அதிகரித்துவிட்டது. இதற்கு எடுத்துகாட்டாகத்தான் பாரதிய ஜனதா அலுவலகத்தில் 3 பெட்ரோல் குண்டுகள் வீசப்பட்டதாக பார்க்கிறோம்” என்று தெரிவித்தார்.

நேற்று அதிகாலை 1.30 மணியளவில் தமிழக பா.ஜ.க. தலைமை அலுவலகம் கமலாலயத்தில் பெட்ரோல் குண்டு வீசப்பட்டது. இதில் யாருக்கும் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை.

# இலங்கையிலும் வருகிறது வீட்டுக்காவல் நடைமுறை

## திட்ட முன்மொழிவை ஏற்றார் நீதி அமைச்சர்

கொழும்பு, பெப். 11

**பல வெளிநாடுகளில் பயன்படுத்தப்படும் வீட்டுக்காவல்முறைமையை இலங்கையில் நடைமுறைப்படுத்துவதற்காக சிறைச்சாலைகள் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள திட்ட முன்மொழிவை நீதியமைச்சர் அலி சப்ரி ஏற்றுக் கொண்டுள்ளார்.**



சிறைச்சாலைகளில் நிலவும் நெரிசல் மற்றும் சிறிய குற்றங்களுக்கான சிறைத்தண்டனை என்பவற்றுக்கான தீர்வாக இந்த முறை பல வெளிநாடுகளில் பயன்படுத்தப்படுகின்றது.

இதற்கமைய சிறிய குற்றங்கள் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்படும் கைதிகளை விளக்கமறியலில் வைக்காமல் குறிப்பிட்ட காலத்திற்கு அவர்களது வீடுகளிலேயே தடுத்து வைப்பதற்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

தொழிநுட்பத்தின் ஊடாக சிறைச்சாலைகள் அதிகாரிகளினால் அவர்கள் கண்காணிக்கப்படுவர் என சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன் சுகாதார தேவைகள், தொழில் நடவடிக்கைகள், மட்டுப்படுத்தப்பட்ட மற்றும் முன்னர் அனுமதி பெற்ற செயற்பாடுகளுக்காக அவர்கள் வீடுகளில் இருந்து வெளியில் செல்ல அனுமதிக்கப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (அ)

# வங்காலையில் புதையல் தோண்டிய மந்திரவாதி உட்பட ஆறு பேர் கைது!

மன்னார், பெப். 11

மன்னார் வங்காலை பஸ்திபுரி பகுதியில் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த மந்திரவாதி உள்ளடங்கலாக 06 பேர் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை வங்காலை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டதோடு, புதையல் தோண்டப் பயன்படுத்தும் ஒரு தொகுதி உபகரணங்களையும் மீட்டனர்.

வங்காலை - நானாட்டான் பிரதான வீதி,பஸ்திபுரி பகுதியில் உள்ள வீடு ஒன்றுக்கு பின்னால் சிலர் புதையல் தோண்டுவதாக வங்காலை பொலிஸாருக்கு வழங்கிய இரகசியத் தகவலின் அடிப்படையில் நேற்று மாலை அப்பகுதிக்குச் சென்ற வங்காலை பொலிஸார் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்ட 6 நபர்களை கைது செய்தனர்.

இவர்களில் கண்டியைச் சேர்ந்த சுமார் 50 வயதுடைய மந்திரவாதி ஒருவரும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவரும் உள்ளடங்குகின்றனர். ஏனைய நான்கு நபர்கள் வாங்காலையைச் சேர்ந்தவர்கள் எனவும் அவர்களில் ஒருவர் ஆசிரியர் எனவும் தெரியவருகின்றது.

மேலும் புதையல் தோண்ட பயன்படுத்தும் ஒரு தொகுதி உபகரணங்கள் மற்றும் மந்திரம் மேற்கொள்ளப் பயன்படுத்தும் ஒரு தொகுதி பொருட்களும் மீட்கப்பட்டன. கைது செய்யப்பட்ட நபர்கள் வங்காலை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (அ)

# தமிழ் மக்களின் பலத்தை உறுதி செய்ய திரளுங்கள்

## அழைக்கிறார் சித்தார்த்தன் எம்.பி.



யாழ்ப்பாணம், பெப். 11

தமிழ் மக்களின் ஒற்றுமையையும் பலத்தையும் உறுதி செய்வதற்கு ஒன்றுதிரளுமாறு அழைப்பு விடுத்துள்ளார் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவர் த.சித்தார்த்தன்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

இன்று தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் இக்கட்டான காலகட்டத்தில் இலங்கையை தமிழ் மக்களின் இருப்பை இல்லாது செய்வதற்கு முயற்சி எடுப்பதுடன் தங்களுக்கான சர்வதேச ஆதரவை பெற்றுக் கொள்வதற்கான பிரசாரங்களை மிகவும் தீவிரமாக மேற்கொண்டு வருகின்றது.

இக் காலத்தில் தமிழ் மக்கள் தமது நலன்சார் வலுவான அரசியல் நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்பது காலத்தின் கட்டாயமாகும். அரசு தொல்பொருள் திணைக்களம் மற்றும் வேறு பல திணைக்களகங்கள் ஊடாகவும் தமிழ் மக்களின் காணிகளை அபகரிப்பதில் தீவிரம் காட்டிவருகின்றது.

குறிப்பாக முல்லைத்தீவு மற்றும் கிழக்குமாகணத்தில் தனது வேலைத்திட்டத்தை தீவிரமாக செயற்படுத்தி வருகின்றது. இதனூடாக தமிழ் மக்களின் தாயகக் கோட்பாட்டை இல்லாது செய்ய முனைகின்றது.

மறுபுறத்தில் இலங்கைத் தமிழ் மீனவர்களுக்கும் தமிழ் நாட்டு மீனவர்களுக்கும் இடையில் காணப்படும் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கு முயற்சிக்காமல் தாமதப்படுத்துவதனூடாக அவ்விரு தரப்பினர்களுக்குமிடையில் முரண்பாட்டை உருவாக்கின்றது. இது போன்ற பல விடயங்களில் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை இல்லாது செய்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றது.

இந்த சந்தர்ப்பத்தில் தமிழ் மக்களின் ஒற்றுமையையும் பலத்தினையும் உறுதி செய்வதற்கு நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு இளங்கலைஞர் மன்றத்தில் நடைபெறும் தமிழ் தேசியக் கட்சிகளின் தலைவர்களும் அரசியல் ஆய்வாளர்களும் கலந்து கொள்ளும் முதலாவது கருத்தரங்கில் கலந்துகொள்வதன் மூலம் கருத்துக்களுக்கு வலுச்சேர்க்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் - என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# புலிகளைத் தோற்கடித்தார் மஹிந்த கொரோனாவை தடுத்தார் கோட்டா!

## அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ புகழாரம்



கொழும்பு, பெப். 11

"தோற்கடிக்கவே முடியாது எனக் கூறப்பட்ட புலிகள் அமைப்பையே தோற்கடித்த தலைவர்தான் மஹிந்த ராஜபக்ஷ. அதேபோல கொரோனா தொற்றிலிருந்து மக்களை காத்தவர்தான் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ." - என்று அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பிரசாரக்கூட்டம் நேற்று முன்தினம் அநுராதபுரத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ரஜரட்டை (அநுராதபுரம்) என்பது எமக்கு என்றும் கைகொடுக்கும் மண். 2015 இல் எமக்கு தோல்வி ஏற்பட்ட போதுகூட ரஜரட்டையில் வெற்றி பெற்றோம். இங்குள்ள மக்கள் போலிகளுக்கு ஏமாறவில்லை.

பிரபாகரனை தோற்கடிக்க முடியாது, புலிகள் அமைப்பு பலம் மிக்கது என அன்று தெரிவித்தனர். ஆனால் அந்த அமைப்புக்கு மூன்றரை வருடங்களில் முடிவுகட்டிய தலைவர்தான் மஹிந்த ராஜபக்ஷ.

நாடு நெருக்கடியான நிலையில் இருக்கும்போதுதான் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சியை பொறுப்பேற்றார். அதன்பின்னர் கொரோனா தொற்று பரவியது. எமது ஜனாதிபதி துவண்டுவிடவில்லை. கொரோனா வைரஸ் பரவலைக்கட்டுப்படுத்துவதில் தீவிரம் காட்டினார். நாட்டு மக்களின் உயிரை பாதுகாத்தார். எனவே, இவ்விரு தலைவர்களும் உலக வரலாற்றில் இடம்பிடிப்பார்கள்-என்றார். (அ)

# கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 35 வீதம் அதிகரிப்பு

கொழும்பு, பெப். 11

கடந்த வாரத்துடன் ஒப்பிடும்போது இலங்கையில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 35 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

சுகாதார அமைச்சின் கொரோனா தலைமை ஒருங்கிணைப்பாளர் வைத்தியர் அன்வர் ஹம்தானி இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

அத்துடன், கொரோனா தொற்றினால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கையும் 15 சதவீதத்தினால் அதிகரித் துள்ளது.

இந்தநிலையில் பூஸ்டர் தடுப்பூசியை அனைவரும் பெற்றுக்கொள்ளவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

பொது இடங்கள் மற்றும் வழிபாட்டுத் தலங்களிலும் தடுப்பூசி முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ)

# எந்த தேர்தலாக இருந்தாலும் இனி பெரமுனவே வெற்றி நடைபோடும்

## சவால் விடுகிறார் அமைச்சர் ரோஹித

கொழும்பு, பெப். 11



நாட்டில் அடுத்து நடைபெறும் எந்த வொரு தேர்தலாக இருந்தாலும் அதில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன வெற்றி நடைபோடும் என்று அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பிரசாரக்கூட்டம் நேற்று அநுராதபுரத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அத்துடன், ஐக்கிய மக்கள் சக்தி தற்போது பல கூறுகளாக பிளவுபட்டுள்ளதாகவும், அரசுக்கான மக்கள் ஆதரவு குறையவில்லை எனவும் அமைச்சர் ரோஹித்த அபேகுணவர்த்தன குறிப்பிட்டார்.

# வடமத்திய ஆளுநர் வழங்கிய 107 சட்டவிரோத நியமனங்கள்!

கொழும்பு, பெப். 11

கல்வித்துறையில் 107 சட்டவிரோத நியமனங்களை வடமத்திய மாகாண ஆளுநர் வழங்கியுள்ளார் என இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் தெரிவித்துள்ளது.

கல்வி நிர்வாக சேவையில் வெற்றிடமாக உள்ள 107 உதவிக் கல்விப் பணிப்பாளர் பணியிடங்களை நிரப்புவதற்கு, ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கான நியமனங்களை ஆளுநர் வழங்கி வருவதாக சங்கம் தெரிவித்துள்ளது.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழு சுற்றறிக்கையில் ஆளுநர்களால் அத்தகைய நியமனங்களை மேற்கொள்ள முடியாது என அறிவுறுத்தியுள்ளபோதிலும் வடமத்திய மாகாண ஆளுநரின் செயல்பாடுகளை வன்மையாகக் கண்டிப்பதாக இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, அரச சேவை ஆணைக்குழுவின் அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்து வழங்கப்பட்ட சட்டவிரோத நியமனங்களை உடனடியாக இரத்துச் செய்து, சட்டவிதிகளுக்கு அமைவாக வெற்றிடங்களை உடனடியாக நிரப்புமாறு இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் வடமத்திய மாகாண ஆளுநரிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (அ)

# போதைப்பொருள் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை கட்டாயமானதாகும்!

## சபையில் அமைச்சர் நிமல் வலியுறுத்தல்



கொழும்பு, பெப். 11

**போதைப்பொருள் கடத்தல் உள்ளிட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட திட்டமிட்ட குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு மரண தண்டனையை கட்டாயமாக்க வேண்டும் என தொழிலாளர் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா நேற்று முன் தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.**

அப்படிப்பட்டவர்களைச் செல்லமாக வைத்து எந்தப் பயனும் இல்லை என்றும் அவர் கூறினார்.

குற்றவியல் நடைமுறைச் சட்டம் (திருத்தம்) சட்டமூலம் மீதான விவாதத்தின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

திட்டமிட்ட குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு ஏன் மரண தண்டனை வழங்கப்படவில்லை என நிமல் சிறிபால டி சில்வா இதன்போது கேள்வி எழுப்பினார்.

இன்று பலர் இதனை பேசுவதற்கு அஞ்சுவதாக தெரிவித்த அமைச்சர், இவ்வாறான குற்றவாளிகளுக்கு மரண தண்டனையை அமுல்படுத்துவதற்கான வேலைத்திட்டத்தை நீதியமைச்சர் ஆரம்பிக்க வேண்டுமென கோரிக்கை விடுத்தார். (அ)

## சபைக்கு வந்தார் சபாநாயகர்!

கொழும்பு, பெப். 11

கோவிட் தொற்றினால் பாதிக்கப்பட்டிருந்த சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன பத்து நாள் தனிமைப்படுத்தப்பட்ட காலத்தை முடித்துக் கொண்டு நேற்று பாராளுமன்றம் திரும்பினார். நேற்றைய சபை அமர்வுகளை சபாநாயகர் தலைமை தாங்கினார். கோவிட் தொற்று காரணமாக சபாநாயகர் அண்மையில் கொழும்பு ஐ.டி.எச். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

பின்னர் மருத்துவமனையில் இருந்து வெளியேறி தெஹிவளையில் உள்ள அவரது வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தார்.

இதுவரை, 49 எம்.பி.க்கள் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டனர். தற்போது 3 பேர் தனிமைப்படுத்தலில் இருப்பதாக பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன. (அ)

## சிறப்பாக செயற்படும் நிதி அமைச்சர் பஸில்

### ஜோன்ஸ்டன் புகழாரம்



கொழும்பு, பெப். 11

நாட்டின் பொருளாதாரம் வீழ்வதற்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டோம். நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, மிகவும் சிறப்பாக - திறமையுடன் நிதி அமைச்சை வழி நடத்துகின்றார் என்று ஆளுங்கட்சி பிரதம கொறடாவான அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் எதிரணி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியல்லவால் முன்வைக்கப்பட்ட கருத்துக்கு பதிலடி கொடுக்கும் விதத்திலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

"பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல இரு நாட்கள் விவாதம் கோரியதுடன், நிதி அமைச்சர் தொடர்பிலும் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

ஜனவரி முதலாம் திகதி நாடு வங்குரோத்தடையும், இது தொடர்பில் நேரலையில் வந்து தகவல் வெளியிடப்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொருளாதார வல்லுனர்கள் எனக் கூறிக்கொள்பவர்கள் சுட்டிக் காட்டினர். தூரநோக்கு சிந்தனையின்றி, தற்காலிக மகிழ்ச்சிக்காகவே அவர்கள் இவ்வாறு கருத்து வெளியிடுகின்றனர் என்பது தற்போது உறுதியாகியுள்ளது.

நாட்டில் பொருளாதாரம் விழுவதற்கு நாம் இடமளிக்க மாட்டோம். நிதி அமைச்சர் சிறப்பாக செயற்படுகின்றார். நிதி அமைச்சர் திறமையாக வழி நடத்துகின்றார்-என்றார். (அ)




## வவுனியா பல்கலைக்கழகத்தை இன்று திறக்கின்றார் ஜனாதிபதி

வவுனியா, பெப். 11

வவுனியா பல்கலைகழகம் இன்று வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இதில் கலந்து கொள்கிறார்.

யாழ்ப்பாணப் பல்கலைகழகத்தின் வவுனியா வளாகம், பல்கலைக்கழகமாக அண்மையில் தரமுயர்த்தப்பட்டது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பல்கலைக்கழகத்தை வைபவ ரீதியாக திறந்து வைப்பார். (அ)

## தென்கொரியாவுக்கு நேற்று பயணமானார் மைத்திரிபால

கொழும்பு, பெப். 11

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று அதிகாலை தென்கொரியாவுக்வுக்குப் பயணமானார்.

அங்கு நடைபெறும் 2022 உலக சமாதான உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அவர் தென்கொரியா நோக்கிப் பயணித்தார்.

2022 ஆம் ஆண்டுக்கான உலக சமாதான உச்சி மாநாட்டின் முக்கிய பேச்சாளராகவும் முன்னாள் ஜனாதிபதி சிறிசேன கலந்து கொள்ளவுள்ளார்.

நேற்று முதல் எதிர்வரும் 13 ஆம் திகதிவரை தென் கொரியாவின் சியோல் நகரில் இந்த மாநாடு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)



## நடமாடும் கஞ்சா வியாபாரி யாழ்ப்பாணத்தில் சிக்கினார்

யாழ்ப்பாணம், பெப். 11

யாழ்.நகரில் நடமாடி கஞ்சா பொதிகளை விற்பனை செய்த நபரை பொலிஸார் கைது செய்தனர்,

சிறிய சிறிய பொதிகளாக, பொதி செய்து, நபர் ஒருவர் யாழ். நகரில் நடமாடி விற்பனை செய்து வருவதாக, இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் பொலிஸார் சந்தேகநபரை கைது செய்ததுடன், கஞ்சா பைக்கெற்றுக்களையும் மீட்டுள்ளனர்.

சந்தேக நபரை விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## அம்பாந்தோட்டை நகர சபை தலைவர் நேற்று இராஜினாமா

கொழும்பு, பெப். 11

அம்பாந்தோட்டை நகரசபை தலைவர் பதவியை இராஜினாமா செய்வதாக எராஜ் பெர்னாண்டோ நேற்று அறிவித்தார்.

அம்பாந்தோட்டை நகரசபையில் நேற்று இடம்பெற்ற மாதாந்த பொதுக்கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். தனிப்பட்ட காரணங்களுக்காக தான் இவ்வாறு பதவி விலகுவதாகவும் அவர் இதன்போது குறிப்பிட்டார். (அ)

## மண்ணெண்ணெய் அடுப்பு தீப்பற்றி இளம்பெண் காயம்!

யாழ்ப்பாணம், பெப். 11

மண்ணெண்ணெய் அடுப்பு தீப்பற்றி இளம் குடும்பப் பெண்ணொருவர் தீக்காயமடைந்துள்ளார்.

யாழ்ப்பாணம், ஆறுகால் மடம் பகுதியில் நேற்று முன் தினம் இந்த சம்பவம் நடந்தது.

நேற்று முன்தினம் இரவு உணவு தயாரித்துக் கொண்டிருந்தபோது, மண்ணெண்ணெய் அடுப்பில் மண்ணெண்ணெய் தீர்ந்துள்ளது.

இதையடுத்து, மண்ணெண்ணெய் அடுப்புக்கு விட்டபோது, தீ விபத்து ஏற்பட்டது.

இதன்போது ஆ.தர்ஷிகா (வயது-30) என்பவரே காயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (அ)

## மனைவியை தீ மூட்டி எரித்து கொன்ற முன்னாள் சிப்பாய்!

காலி, பெப். 11

பொலிஸ் அதிகாரியான பெண்ணை அவரின் கணவர் பெற்றோல் ஊற்றி தீயிட்டு எரித்துக் கொலை செய்தார்.

இந்தச் சம்பவம் காலி மாவட்டம் பலபிட்டிய - கோனாபீனுவல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

சந்தேகநபரான கணவர் இராணுவத்திலிருந்து ஓய்வுபெற்றவர் என்றும், தற்போது மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றார் என்றும் தெரிவிக்கப்பட்டது. இருவருக்கும் இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்ட நிலையில் கணவர் அவரை அடித்து பெற்றோல் ஊற்றி தீ மூட்டி எரியூட்டினார் என்று கூறப்படுகின்றது. சந்தேகநபரை காலி பொலிஸார் கைது செய்து தடுத்து வைத்து விசாரித்து வருகின்றனர். (ஐ)

# அநியாயமாக தண்டிக்கப்படும் அப்பாவிகள் நாளை நாட்டுக்கு ஆபத்தானவர்களாகலாம்!

## ரிஷாத் பதியுதீன் எம். பி.

கொழும்பு, பெப். 11

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் அநியாயமாக தண்டிக்கப்படும் அப்பாவிகள் நாளை நாட்டுக்கு ஆபத்தானவர்களாக மாறக் கூடிய அபயம் உள்ளது எனவும், இதனால் அநியாயமாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை பிணையில் விடுவிப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்குமாறு சட்டமா அதிபரை கேட்டுக் கொள்வதாக பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற நீதி அமைச்சின் கீழான குற்றவியல் நடவடிக்கை முறை சட்டக்கோவை, ஆளணியினருக்கு எதிரான கண்ணி வெடிகளைத் தடைசெய்தல் சட்டமூலம், நீதித்துறை (திருத்த) சட்டமூலங்கள் மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இதன்போதே அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பயங்கரவாத தடுப்புச் சட்டம் தொடர்பான சட்டமூலத்தை வாசித்துப் பார்த்தேன். அதில், எந்தவித மான பெரிய மாற்றங்களையும் பார்க்கவில்லை. மூன்று மாதங்களாக 18 மாதங்களுக்கு தடுத்து வைத்திருக்க பாதுகாப்பு அமைச்சு வழங்கப்பட்டுள்ள அதிகாரம் 12 மாதங்களாக குறைக்கப்பட்டுள்ளது. இது மட்டுமே இதில் உள்ள மாற்றமாக உள்ளது.

இந்நிலையில், 18, 20 வருடங்களாக பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படாதும், வழக்குத் தொடரப்படாதும் இன்னும் சிறைகளில் வாடிக் கொண்டிருப்பதை நான் சிறையில் இருந்த போது காணக் கூடியதாக இருந்தது.

ஆயுதம் ஏந்தி போராடிய போராளிகள் 12,000 பேர் மன்னிப்பு அடிப்படையில் விடுதலை செய்யப்பட்ட பின்னரும் சமூகவலைத்தளங்களில் சில விடயங்களை பகிர்ந்தார்கள் என்ற பெயரில் பல தமிழ் இளைஞர்கள் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் பல மாதங்களாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமையையும் காணக்கூடியதாக இருந்தது. அவ்வாறானவர்களுக்கு நிவாரணங்கள் எதனையும் இந்த சட்டமூலத்தில் காணக்கிடைக்கவில்லை.

இதேவேளை சஹ்ரான் என்ற தலைமையில் நடந்த குண்டுவெடிப்பினால் முழு முஸ்லிம் சமூகமும் பல வகையான பிரச்னைகளுக்கு முகம்கொடுத்துள்ளது. இந்த பாராளுமன்றத்தை 20 வருடங்களுக்கு மேலாக பிரதிநிதித் துவப்படுத்திய என்னைக்கூட எவ்வித காரணமும் இன்றி அந்த குண்டுத் தாக்குதலை காரணமாக வைத்து பல மாதங்கள் சிறையில் தடுத்து வைத்திருந்தனர். இந்த பயங்கரவாத சட்டத்தின் கீழ் யாரையும் காரணங்கள் இன்றி பல மாதங்களுக்கு சிறைகளில் வைக்கலாம்.

சிரேஷ்ட சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். அவரை குற்றவாளியாக்க வேண்டும் என்பதற்காக 20,000 ரூபாய் சம்பளத்திற்காக கரத்தீவு என்ற அரபிக் கல்லூரியில் கற்பித்துக்கொண்டிருந்த மூன்று உலமாக்களை கைது செய்துள்ளனர். இவர்கள் மூவரும் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் ஒரு வருடத்திற்கும் மேலாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள், சி.ஐ.டியில் தடுத்து வைக்கப்பட்டிருந்த காலப்பகுதியில் ஹிஜாஸ் ஹிஸ்புல்லா நீங்கள் இருந்த இடத்திற்கு வந்தார் என்று கூறினால் உடனே உங்களை விடுதலை செய்வோம் என்றும் இல்லாவிட்டால் 10, 15 வருடங்கள் சிறையில் இருக்க வேண்டி வருமென சி. ஐ. டியில் இருந்த உத்தியோகத்தர்கள் அவர்களை பலவந்தப்படுத்திய போதும் அவர் வரவில்லை என்று அவர்கள் உண்மையை கூறியுள்ளனர். இவ்வாறு உண்மையை கூறியதால் அவர்கள் பல மாதங்களாக சிறைகளில் இருக்கின்றனர். இவ்வாறான அப்பாவிகளை இன்னும் சிறைகளில் வைத்துக் கொண்டு விடுதலை செய்யாது இருக்கின்றனர்.

இதேவேளை இந்த குண்டு வெடிப்பு சம்பவம் தொடர்பில் 300 பேருக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டிருந்தாலும் 25 -30 பேருக்குதான் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மற்றையவர்களுக்கு தாக்கல் செய்யப்படவில்லை.

இவர்கள் குற்றவாளிகாக இருந்தால் குற்றப் பத்திரிகைகளை தாக்கல் செய்யுங்கள் என்று நாங்கள் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு கூறுகின்றோம். அநியாயமாக இவர்களை காரணங்கள் இன்றி யாரையோ ஏமாற்றுவதற்காகவும், அரசியல் இருப்புக்காகவும் இவ்வாறான அப்பாவிகளை தண்டிக்காதீர்கள் என்றே நாங்கள் கூறுகின்றோம். யார் குற்றம் செய்தாலும் தண்டிக்கப்பட வேண்டும்.

ஆனால் குற்றம் செய்யாதவர்களை தங்களிடம் இருக்கும் அதிகாரத்தை மற்றும் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை பயன்படுத்தி அநியாயமாக பழிவாங்குவது என்பது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல - என்றார்.

# இரும்பின் விலை சடுதியாக உயர்வு

கொழும்பு, பெப். 11

ஒரு மெற்றிக் தொன் இரும்பின் விலையானது 2 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாயாக அதிகரித்துள்ளது என்று இரும்பு இறக்குமதியாளர்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

உலக சந்தையில், இரும்பின் விலை உயர்வு மற்றும் டொலர் பற்றாக்குறை ஆகியன இதற்கான பிரதான காரணிகளாகும் என்று அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதன் காரணமாக தாம் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளதாக, கட்டட நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)

# சுகாதாரத் துறையினர் வவுனியாவில் கவனவீர்ப்பு!

வவுனியா, பெப். 11

சம்பள பிரச்னை உள்ளிட்ட 7 அம்சக் கோரிக்கைகளை முன் வைத்து சுகாதார தொழில் சங்கங்கள் ஒன்றிணைந்து வவுனியாவில் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றை நேற்று முன்னெடுத்திருந்தனர்.

நாடாளாவிய ரீதியில் தாதியர்கள், பொது சுகாதார பரிசோதகர்கள் உள்ளிட்ட 16 தொழில் சங்கங்களைச் சேர்ந்தோர் 7 கோரிக்கைகளை முன் வைத்து கடந்த திங்கட்கிழமை முதல் பணிபுறக்கணிப்பு மற்றும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதற்கு ஆதரவு தெரிவித்து வவுனியா வைத்திய சாலைக்கு முன்பாக நேற்று குறித்த ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது.

இதில் சுகாதார சேவையைச் சேர்ந்த 16 தொழில் சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், " சம்பளப் பிரச்னைக்கு உடனடியாக தீர்வு வேண்டும், சுகாதார நிர்வாக சேவையை நிறுவுக, உரிய காலப்பகுதியில் பதவி உயர்வு வழங்கு, சம்பள முரண்பாட்டை நீக்கு, மருந்துகளின் விலைகளை உடனடியாக குறை" உள்ளிட்ட பல வேறு கோரிக்கைகளை முன் வைத்து கோஷங்களை எழுப்பியதுடன், சுலோக அட்டைகளையும் ஏந்தியிருந்தனர்.

அத்துடன், தமது கோரிக்கைக்கு சுகாதார அமைச்சு சாதகமான பதிலை வழங்காது விடின் தமது போராட்டம் தொடரும் எனவும் இதன் போது அவர்கள் மேலும் தெரிவித்தனர். (ஐ)

# பறிபோகும் ஆபத்தில் கொக்கிளாய் நிலங்கள்

## கனிய மணல் அகழ்வுக்காக அளவீடு ஆரம்பம்

முல்லைத்தீவு, பெப். 11

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாய் கிராம மக்களின் பூர்வீக நிலங்களை கனிய மணல் அகழ்வுக்காக அளவீடு செய்யும் நடவடிக்கைகள் மும்முரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக கிராம மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

கடந்த வாரம் கொக்கிளாய் முகத்துவாரம் தொடக்கம் கொக்குத்தொடுவாய் வரையான மக்களின் விவசாய செய்கைக்காக பயன்படுத்தும் நிலங்கள் மற்றும் தோட்ட செய்கைக்கான நிலங்கள் குடியிருப்பு நிலங்கள் உள்ளடங்கலாக இவ்வாறு அளவீடு செய்யும் நடவடிக்கையை நில அளவை திணைக்களத்தினர் மேற்கொண்டுள்ளதாக கொக்கிளாய் மக்கள் தெரிவித்தனர்.

ஏற்கனவே கொக்கிளாய் கிழக்கு பகுதியில் 16 பேருக்கு சொந்தமான 44 ஏக்கர் பூர்வீக காணிகளை எந்தவித முன்னறிவித்தலோ இழப்பீடோ வழங்காது கையகப்படுத்தி இல்மனைட் அகழ்வை ஆரம்பித்துள்ள கனிய மணல் கூட்டுத்தாபனம் தற்போது மேலும் காணிகளை கையகப்படுத்தும் நடவடிக்கையாக இவ்வாறு முன்னறிவித்தல் எதுவுமின்றி தமது காணிகளை கையகப் படுத்தும் நோக்கோடு நில அளவை செய்து எல்லைப் படுத்தும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக காணி உரிமையாளர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

குறிப்பாக கொக்கிளாய் கிழக்குப் பகுதியில் சில வாரங்களுக்கு முதல் அறுவடை மேற்கொண்ட வயல் நிலங்கள் உள்ளடங்கலாக காணிக்குரிய ஆவணங்களை கூட வைத்துள்ளவர்களின் காணிகள் 60 ஏக்கருக்கு மேற்பட்ட பகுதி இவ்வாறு கனிய மணல் கூட்டு தாபனத்துக்காக நில அளவை செய்து எல்லைப்படுத்த பட்டுள்ளதாக கிராம மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு தமது காணிகளில் நில அளவீடு இடும்பெறுவதை அறிந்து அவ்விடத்துக்கு சென்ற காணி உரிமையாளர்களுக்கு நில அளவை திணைக்கள அதிகாரிகள் இது மேலிடத்து உத்தரவு இதற்கு அமையவே நாங்கள் அளவீடு செய்கின்றோம் . உங்கள் காணிகளாக இருந்தால் நீங்கள் நீதிமன்றத்தை நாடுங்கள் என தெரிவித்துள்ளதாக காணி உரிமையாளர்கள் கூறினர்.



கனிய மணல் அகழ்வுக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த காணி சுவீகரிப்பு கொக்கிளாய் முகத்துவாரத்திலிருந்து கரையோரமாக கடல் கரையிலிருந்து சுமார் ஐந்நூறு மீற்றருக்கும் அதிகமான பகுதி கிராமத்தின் உள்ளே நீண்டு செல்வதோடு கொக்கிளாய் ,கருநாட்டுக்கேணி , கொக்குத்தொடுவாய் , நாயாறு , செம்மலை கிழக்கு வரை சுமார் 12 கிலோ மீட்டர்களுக்கு அதிகமான கரையோரப்பகுதிகள் வரை இவ்வாறு காணிகளை எதிர் வரும் நாட்களில் அளவீடு செய்து சுவீகரிப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் கிராம மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே மஹாவலி எல் வலயம் மற்றும் சிங்கள மீனவ குடியேற்றம் இராணுவக் காணி அபகரிப்பு வன திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம் பௌத்த விகாரை அமைப்பதற்கான காணி பறிப்பு என பல் வேறு வகையில் இந்த கிராமங்களில் காணி அபகரிப்பு இடம்பெற்ற நிலையில் தற்போது கனிய மணல் கூட்டு தாபனமும் மக்களுக்கு சொந்தமான காணிகளை கையகப் படுத்த நடவடிக்கை மேற் கொண்டுவருவதை தமது இருப்பை கேள்விக்குள்ளாக்கும் செயற்பாடு என குறித்த கிராம மக்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களின் அழைப்பின் பேரில் காணி அளவீடு இடம்பெறும் கொக்கிளாய் பகுதிக்கு நேற்று முன் தினம் சென்ற முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் பாதிக்கப்பட்டுள்ள காணி உரிமையாளர்களுடன் கலந்துரையாடலை மேற்கொண்டிருந்ததோடு அளவீடு செய்யப் பட்டுள்ள காணிகளையும் நேரில் சென்று பார்வையிட்டார். விரைவாக தான் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சியின் உயர் மட்டத்துக்கு இந்த பிரச்னையை கொண்டு செல்வதோடு இந்தக் காணி அபகரிப்பை தடுக்கும் விதமாக சட்ட நடவடிக்கைக்கு செல்லும் பொருட்டு நீதிமன்றை நாடுவதற்கு ஏற்பாடுகளை செய்வதாகவும் காணி உரிமையாளர்களோடு இணைந்து இந்தக் காணி அபகரிப்புக்கு எதிராக போராடவும் இணைந்து நிற்பதாக தெரிவித்தார்.

இந்த சந்திப்பில் கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன், காணி உரிமையாளர்கள், கிராம மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (அ)

ஈழநாடு





# ஜெனிவா கூட்டத் தொடரும் நீதியமைச்சரின் வடபகுதி விஜயமும்!

**சர்வதேச மட்டத்தில் சில அழுத்தங்கள் மேற்கொள்ளப்படும்போது கண்துடைப்பாகச் சில விடயங்களை மேற்கொள்வதும் அவற்றைப் பெரிதாகப் பிரசாரம் செய்வதன் மூலம் பிரச்சினையின் அடிப்படையை மழுங்கடிப்பதும் இலங்கையின் ஆட்சியாளர்களுக்கு கைவந்த கலையாகும்.**



**நா.யோகேந்திரநாதன்**

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனீவாவில் மனித உரிமைகள் பேரவையின் 49ஆவது கூட்டத் தொடரில் அதன் ஆணையாளர் இலங்கை தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பிக்கவுள்ள நிலையில் இலங்கையில் நீதியமைச்சர் அல் சப்ரி வட பகுதிக்கு மேற்கொண்ட விஜயமும் அங்கு அவர் வெளியிட்ட கருத்துகளும் பல தரப்பினராலும் முக்கியமானவையாகப் பார்க்கப்படுகின்றன.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவதாகவும் அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் 13ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டமும், மாகாண சபைகளும் நீக்கப்படாதெனவும் காணாமற் போனோர் பற்றி தகவல்கள் திரட்டப்படுகின்றனவெனவும் அவற்றின் அடிப்படையில் விசாரணைகளை நடத்தி உரிய தீர்வுகள் காணப்படுமெனவும் அவர் வெளியிட்ட கருத்துக்கள் கவனத்தில் எடுக்கப்பட வேண்டியவையாகும்.

மேலோட்டமாகப் பார்க்கும்போது அவரின் கருத்துகள் தற்சமயம் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் பலவற்றுக்கு வெகுவிரைவில் தீர்வு எட்டப்படுமென்ற தோற்றப்பாட்டை உருவாக்கும் வகையிலேயே அமைந்துள்ளது.

ஆனால் ஜெனீவா கூட்டத் தொடர் ஆரம்பமாகவுள்ள சந்தர்ப்பங்களில் இவ்வாறான தேன்பூசிய கருத்துகள் வெளிவருவதும், கண்துடைப்பாக சில குற்றச்சாட்டுக்களைத் திசை திருப்பும் வகையில் சில நடவடிக்கைகள் எடுப்பதும், பேரவைக் கூட்டத் தொடர்களில் பேரவையின் தீர்மானத்தில் பெரும்பான்மையானவை நிறைவேற்றப்பட்டுள்ளன எனவும் ஏனையவற்றை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அறிக்கை சமர்ப்பிப்பதும் வருடா வருடம் நிகழும் விடயங்கள்தான்.

ஆனால் போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் என்பன தொடர்பான ஆக்கபூர்வமான விசாரணைகளோ அல்லது நடவடிக்கைகளோ இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்பதும் அரசியல் கைதிகள் தொடர்பான நியாயங்கள் நிலை நாட்டப்படவில்லையென்பதும், காணாமற் போனோர் விவகாரத்துக்கு தீர்வோ அல்லது தீர்வு முயற்சிகளோ முன்னெடுக்கப்பட வில்லையென்பதும் இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்ட தமிழ் மக்களின் காணிகள் இன்னமும் விடுவிக்கப்படவில்லை என்பதுமே நடைமுறை உண்மைகளாகும்.

சர்வதேச மட்டத்தில் சில அழுத்தங்கள் மேற்கொள்ளப்படும்போது கண்துடைப்பாகச் சில விடயங்களை மேற்கொள்வதும் அவற்றைப் பெரிதாகப் பிரசாரம் செய்வதன் மூலம் பிரச்னையின் அடிப்படையை மழுங்கடிப்பதும் இலங்கையின் ஆட்சியாளர்களுக்கு கைவந்த கலையாகும்.

இலங்கையில் அரசியல் கைதிகள் என எவருமில்லை. அவர்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் என ஜனாதிபதி, நீதியமைச்சர் உட்படப் பலரும் மீண்டும் மீண்டும் கூறிவரும் நிலையில் நீதி அமைச்சர் அண்மைய வடபகுதி விஜயத்தின்போது 27 பேரை விடுவிக்கவுள்ளதாகத் தெரிவித்திருந்தார். மேலும் ஜனாதிபதி பொது மன்னிப்பின் பேரில் முதலில் 10 பேரை விடுவித்ததாகவும் புத்தாண்டை முன்னிட்டும் சிலர் விடுவிக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் இவர்களில் நீண்டகாலம் விசாரணையின்றித் தடுத்துவைக்கப்பட்டவர்களோ, நீண்ட காலம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களோ உள்ளடக்கப்படவில்லை. மாறாக விடுவிக்கப்பட்டவர்கள் பிரபாகரனின் படங்களை வைத்திருந்தனர், தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்கள் எனப் பெரும் தண்டனை வழங்கப்பட முடியாதவர்களே. அண்மையில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களில் 13 பேர் சிறு சம்பவங்களின் அடிப்படையில் ஒரு வருடத்திற்கு உட்பட்ட காலத்தில் கைது செய்யப்பட்டவர்களும் என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் ஏற்கனவே சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு தண்டனைக் காலம் முடிவடைய சில நாட்களே உள்ளவர்கள் கூட இவர்களுள் அடங்கும்.

அதாவது இந்த விடுவிப்புகள் தாம் படிப்படியாக அரசியல் கைதிகளை விடுவித்து வருவதான ஒரு தோற்றத்தை வெளிக்காட்டும் கண்துடைப்பாகவே மேற்கொள்ளப்பட்டன.

எத்தனையோ வன்முறைகளுக்குத் தலைமை தாங்கியவரான ஞானசார தேரர் நீதிமன்ற அவமதிப்புக்காகச் சிறை வைக்கப்பட்டபோது அவர் ஜனாதிபதியின் பொது மன்னிப்பில் விடுதலை செய்யப்பட்டார். போராளிகளுக்கு ஒருநாள் தங்க இடம்கொடுத்த குற்றச்சாட்டில் சிறைவாசம் அனுபவிக்கும் இந்து குருவான ரகுபதி சர்மாவுக்கு பொது மன்னிப்பு வழங்கப்படவில்லை. அதிலிருந்த ஜனாதிபதியினால் வழங்கப்படும் பொது மன்னிப்பின் நியாயங்களை நாம் புரிந்து கொள்ளமுடியும்.

சர்வதேச மனித உரிமையாளர்களும் மனித உரிமைகள் பேரவையும் பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படவேண்டுமெனக் கோரும் நிலையில் தற்சமயம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் திருத்தம் கொண்டுவர ஒரு குழு நியமிக்கப்பட்டு அதனுடைய அறிக்கை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டு விட்டதாகவும் நீதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதில் அவர் குறிப்பிட்ட விடயத்தில் தற்சமயம் உள்ள தடுப்புக் காவல் விசாரணைக்காலம் 18 மாதங்களிலிருந்து 12 மாதங்களாகக் குறைக்கப்படுமெனவும் விசாரணைகளைத் துரிதப்படுத்தும் வகையில் சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்படுமெனவும் கைதிகளை நீதிபதிகளும் சிறைச்சாலை மருத்துவர்களும் சென்று பார்க்கமுடியுமெனவும் சில விடயங்கள் அடங்கியிருந்தன. ஆனால் ஏற்கனவே சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு சில கைதிகள் சிறைத் தண்டனை பெற்றமையுடன் அவற்றின் பணிகள் காணாமற் போய்விட்டன.

இவ்வாறு அவர்களால் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்களில் அரசியல் கைதிகளுக்கு ஏதாவது மாற்றமோ நன்மையோ இருப்பதாகத் தெரியவில்லை.

உண்மையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதற்குப் பதிலாகக் கொண்டு வரப்படும் திருத்தங்கள் மனித உரிமைகள் பேரவையையும் சர்வதேசத்தையும் ஏமாற்றும் ஒரு நடவடிக்கை என்பதில் சந்தேகமில்லை. ஆனால் மேற்படி திருத்தங்களில் காணப்படும் ஓட்டைகளும் முரண்பாடுகளும் முன்பைவிடக் கூடுதலான ஒடுக்குமுறையை மேற்கொள்ளப் புலனாய்வுப் பிரிவினருக்கும் பொலிஸாருக்கும் வாய்ப்புகளை வழங்கினால் ஆச்சரியப்பட எதுவுமில்லை.

காணிகள் விடுவிப்பு தொடர்பாக அமைச்சர் கருத்து வெளியிடும்போது அதற்கான நடவடிக்கைகளை ஜனாதிபதி மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்தார்.

ஜனாதிபதி 9ஆவது நாடாளுமன்றத்தின் 2ஆவது கூட்டத் தொடரில் தனது கொள்கை விளக்க உரையில் 90 வீதமான காணிகள் விடுவிக்கப்பட்டதாகக் கூறினார். இன்னும் பல ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் அகதி முகாம்களிலும் உறவினர் வீடுகளிலும் இந்தியாவிலும் வசிக்கும் நிலையில் இது சரியான தகவலாக இருக்க முடியாது. அது மட்டுமின்றி தமிழ் மக்களின் பாரம்பரியக் காணிகள் வனவளத் திணைக்களத்தாலும் வனபரிபாலன திணைக்களத்தாலும் தொல்பொருட் திணைக்களத்தாலும் சிங்களக் குடியேற்றங்களாலும் தொடர்ந்து அபகரிக்கப்பட்டு வருகின்றன. வன்னியில் மட்டும் விவசாயிகளின் 7322 ஹெக்டெயர் பயிர் செய்கை நிலங்கள் வனவளத் திணைக்களத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

அதேபோன்று காணாமற் போனோர் விவகாரம் எல்லோருக்கும் பொதுவானதெனவும் இராணுவத்தில் மட்டும் 4,000 பேர் காணாமற் போயுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். அதாவது காணாமற் போனோர் போரில் இறந்திருக்கலாமெனவும் இறந்தவர்களைத் தங்களால் மீட்க முடியாதெனவும் தெரிவித்துள்ளார். ஆனால் காணாமலாக்கப்பட்டோரின் பெற்றோராலும் உறவினர்களாலும் போர் முடிந்த பின்பு இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டவர்கள் போரில் இறந்திருக்கமுடியுமா? அப்படி ஒப்படைக்கப்பட்டவர்களின் பதிவுகள் இராணுவத்திடம் இருக்கவேண்டும். எனவே அவர்கள் தொடர்பாக அரசாங்கம் பொறுப்புக் கூறியேயாக வேண்டும். ஆனால் நீதியமைச்சரோ தங்களிடம் முறைப்பாடு செய்தால் விசாரணை செய்யமுடியும் என்கிறார். நல்லிணக்க ஆணைக்குழு, பரணகம ஆணைக்குழு என நடத்தப்பட்ட விசாரணைகளில் போதியளவு முறைப்பாடுகள் செய்யப்பட்டு அவற்றின் அறிக்கைகளும் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டு விட்டன. எனவே மீண்டும் முறைப்பாடு கோருவது ஒரு அப்பட்டமான ஏமாற்றாகும்.

எனவே வழமைபோல் ஜெனீவா கூட்டத் தொடருக்கு முன்பாக மேற்கொள்ளப்படும் பிரசார தந்திரங்கள் அடிப்படையில் ஜெனீவாவில் சந்திக்கும் நெருக்கடிகளைச் சமாளிப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட நாடகத்தின் முன்னாயத்த நடவடிக்கை என்பது தெளிவான விடயமாகும். எனவே பயங்கரவாத் தடைச் சட்டத் தில் திருத்தம் உட்பட நீதியமைச்சரால் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் ஜெனீ வாவில் இலங்கை அரசால் அறிக்கையாக முன்வைக்கப்படும் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால் ஜெனீவா கூட்டத் தொடர் முடிந்த பின்பும் மேற்படி விடயங்களில் எந்தவித மாற்றமும் ஏற்படப் போவதில்லை. அதே ஒடுக்குமுறைகள் தொடரத்தான் செய்யும் என்பது தமிழ் மக்கள் எதிர்கொண்ட அனுபவங்களாகும். ■

நன்றி - அருவி

ஈழநாடு





பைஷல் இஸ்மாயில்

**யுனானி மருத்துவத்தில், ஆரோக்கியத்தைப் பேணுவதற்கும் பல்வேறு நோய்கள் மற்றும் சீர்குலைவுகளைத் தடுப்பதற்கும் ஆரோக்கியமான உணவுப் பழக்க வழக்கங்களுக்கு விரிவான வழிகாட்டுதல்கள் வகுக்கப்பட்டுள்ளன.**

## இன்று உலக யுனானி தினம்

# ஆரோக்கியத்துக்கான வழியை காட்டும் யுனானி மருத்துவம்!

யுனானி வைத்தியர் வைத்தியக் கலாநிதி ஹக்கீம் அஜ்மல்கான் 1868 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதி இந்தியாவில் பிறந்து யுனானி மருத்துவத்தின் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் வித்திட்டு அளப்பரிய சேவைகளையும் செய்தவராவார். அவரின் பிறந்த தினத்தையும், யுனானி மருத்துவத்துறைக்கு அவர் செய்த அளப்பரிய சேவைகளையும் கருத்திற்கொண்டு முதன்முதலாக 2017 ஆம் ஆண்டு இல் கொண்டாடப்பட்டது.

அன்றிலிருந்து ஒவ்வொரு வருடமும் பெப்ரவரி 11 ஆம் திகதி உலக யுனானி தினம் சர்வதேச ரீதியாக கொண்டாடப்பட்டு வருகின்றது. இத்தினத்தின் முக்கிய நோக்கம் யுனானி மருத்துவமுறை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும்.

மருத்துவத்தின் தந்தையான புஹ்ராத் என அழைக்கப்படும் ஹிப்போகிரட்டீஸ் இன் நகைச்சுவை கோட்பாடு ஊடாக கிரேக்கத்தில் ஆரம்பமான யுனானி வைத்தியம் இந்தியாவினூடாக அரபு வைத்தியம் என்ற பெயரில் அரபிகளின் கரையோர வருகையுடன் 10 - 12 ஆம் நூற்றாண்டுகளில் வந்தடைந்தது. அரசர்களின் குடும்ப வைத்தியராக காலாகாலம் அவர் பணியாற்றியதிலிருந்து இலங்கை மண்ணில் இவ்வைத்தியத்துறை சேர்றாசிக் பரீட் மற்றும் வைத்தியர் கே.பாலசிங்கம் அவர்களின் அயராத முயற்சியால் இராஜகிரிய சுதேச மருத்துவக் கல்லூரியில் 1929 ஆண்டு இணைக்கப்பட்டது.

இந்த வைத்திய முறைகளை கற்பிப்பதற்காக இந்தியாவிலிருந்து விரிவுரையாளர்கள் கொண்டுவரப்பட்டு யுனானி மருத்துவக் கல்வியை பலருக்கும் வழங்கியதுடன் இப்போது கொழும்பு பல்கலைக்கழகத்தின் ஒரு பகுதியாக மிளிர்ந்து நிற்கின்றது.

அங்கு ஆயுர்வேத, யுனானி, சித்த மருத்துவ முறைகள் கற்றுக் கொடுக்கப் பட்டு இன்றும் அதன் சேவைகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. இலங்கையில் ஆசியாவிற்குறிய எல்லா சுதேச வைத்திய முறைகளும் 1961 யஉவ ழக யுலரசஎநனய என்ற சட்டத்தில் ஆயுர்வேத என்ற சொல்லிற்குள்ளே இந்த வைத்திய முறைகள் கொண்டுவரப்பட்டுள்ள விடயம் குறிப்பிடத்தக்கதாகும்.

யுனானி மருத்துவம் ஒரு ஆரோக்கியத்துக்கான முழுமையான அணுகுமுறையை கொண்டுள்ளது. இதன் மூலம் நோய்களிலிருந்து சிகிச்சை பெறவும் நோய் வரும் முன் காக்கவும் பல நுட்பங்களைக் கொண்டுள்ளது. நாடித்துடிப்பின் ஓட்டத்தினை வைத்து உடல் சமநிலைக் குழப்பத்தை அறிந்து அதற்கேற்ப சிகிச்சையளிக்கும் உன்னதமான ஒரு முறையே யுனானி வைத்திய முறையாகும்.

"நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வுக்கான யுனானி மருத்துவத்தில் உணவு மற்றும் ஊட்டச்சத்து" என இவ்வாண்டு சர்வதேச மாநாட்டின் கருப்பொருளாக எடுக்கப்பட்டு இன்று கொண்டாடப்படுகின்றன. உணவே ஆற்றலின் அடிப்படை ஆதாரம் என்பதை நாம் அனைவரும் அறிவோம். உடலின் இயல்பான வளர்ச்சி மற்றும் வளர்ச்சி அதனுடன் சேர்ந்ததான ஆரோக்கிய பராமரிப்பு சார்ந்துள்ள ஆரோக்கியமான உணவு போன்ற விடயங்கள், உடலின் இயற்கையான பாதுகாப்பு அமைப்பை மேம்படுத்துதல், நோய் எதிர்ப்புச் சக்தி உகந்த ஆரோக்கியத்தை பேணுவதற்கும் நோய்களைத் தடுப்பதற்கும் முக்கியமானதாக இருக்கின்றன.

யுனானி மருத்துவத்தில், ஆரோக்கியத்தைப் பேணுவதற்கும் பல்வேறு நோய்கள் மற்றும் சீர்குலைவுகளைத் தடுப்பதற்கும் ஆரோக்கியமான உணவுப் பழக்க வழக்கங்களுக்கு விரிவான வழிகாட்டுதல்கள் வகுக்கப்பட்டுள்ளன. யுனானி வைத்திய முறையின் சேவை அனைத்து மக்களையும் சென்றடைந்து ஆரோக்கியமான வாழ்க்கை முறையுடன் வாழவேண்டும் என்பதற்காக இத்தினம் கொண்டாடப்படுகின்றது. ■

---

# உள்ளூர் பொறிமுறையில் நீதி கிடைக்காது என்பதற்கு மற்றுமொரு உதாரணம்...

## குமாரபுர படுகொலையின் 26 வருட நினைவு

திருமலையான் விபூஷ்

திருக்கோணமலையில்லுள்ள கிளிவெட்டி குமாரபுரத்தில் 1996.02.11 ஆம் திகதி படுகொலை செய்யப்பட்ட சம்பவம் மறக்கமுடியத்தும், மறைக்கமுடியாததொன்றாகும். அந்தப் படுகொலைகளுக்கு நீதி கிடைக்குமா என்ற கேள்விக் குறியுடன்தான் பாதிக்கப்பட்ட மக்கள் இன்றும் உள்ளனர். உள்ளூார் பொறிமுறையில் நீதி கிடைக்காது என்பதற்கு மற்றொரு உதார ணம் குமாரபரம் படுகோலை விசாரணை என மனித உரிமை அமைப்புக்கள் சொல் கின்றன.

அன்று 4.00 மணியலவில் நடந்த இச் சம்பவத்தில் ஆண்கள்,பெண்கள் மற்றும் பிள்ளைகள் என 26 பொது மக்கள் படுகொலைசெய்யப்பட்டனர்.

இச் சம்பவம் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சியில் நிகழ்ந்தது . அன்றிலிருந்து பாதிக்கப்பட்ட மக்கள் நீதி கோரி போராட்டங்களை நடத்தியுள்ளார்கள். நல்லாட்சியில் 2016 ஆண்டு அனுராதபுர நீதி மன்றில் நீதி மன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

20 ஆண்டுகளுக்கு பிறகு இதனை கண்ட மக்கள் புதிய நம்பிக்கையோடு சாட்சியமளித்தனர். நீதி மன்ற நடவடிக்கை களில் பல சிரமங்களுக்கு மத்தியலும் பங்கு கொண்டு தம் கண்முன்னே நடந்த நிகழ்வின் உண்மையை சாட்சியமளித்தும் நல்லாட்சிக்காலத்தில் வந்த தீர்ப்பால் மக்கள் பெரும் சோர்வையும் , விரக்தியையும், ஏமாற்றத்தையும் ஏற்படுத்தியது. மக்கள் நம்பிக்கை இழந்து விட்டனர்.

நடந்த படுகொலையின் நிவாரணம் நீதி, புனர்வாழ்வு நட்ட ஈடு எல்லாமே வெறுமனவே கண்ணீர் மட்டுமே. நாங்கள் நீதி மறுக்கப்பட்ட அப்பாவி தமிழர்கள் என்பதனை மீண்டும்,மீண்டும் உணர்வதாக கவலையுடனும், கொந்தளிப்புடனும் கூறியகிருந்தார்கள். அது மட்டுமின்றி எமக்கு நடந்த கொடுமைகளை இந்த நாட்டின் நீதி ஏற்றுக்கொள்ள விட்டாலும் எமது நிலைப்பாட்டையும் சம்பவத்தையும் நங்கள் பதிவு செய்து எதிர்கால சந்ததியினருக்கு, சர்வதேசத்திற்கும் ஏதோ ஒரு வழியில் அடையாளப்படுத்தப்பட வேண்டும் என்று கூடி முடிவு எடுத்தனர்.




திருக்கோணமலை மாவட்டம் எனபது வடகிழக்கில் தலைநகரம் என்பதுடன் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நகரமாகும். இப்படி யான தமிழ் இனத்தின் முக்கியமான மாவட் டத்தில் இப்படி பல படுகொலைகள் நிகழ்ந் துள்ளன.

திருக்கோணமலை மாவட்டத்தின் 01.02.2006 ஐந்து மாணவர்கள் படுகொலை, 17 அக்சன் பாம் தொண்டு நிறுவனப் பணியாளர்கள் மூதூரில் 2006இல் படுகொலை, மல்லிகைத்தீவு பெருவெளி கிராமத்தின்ப 40பேரின் படுகொலை, சம்பூர் சுற்றிவளைப்பில் 1985,86 இன் 25 இற்கும் அதிகமானோரின் படுகொலை, தம்பலகாமம் பொற்கோனி 09 பேர் படுகொலை, திருக்கோணமலை மக்கேசர் விளையாட்டு அரங்கு 53படுகொலை இதைத் தவிர,1990.07.07 நடந்த பரவலான அப்பாவிகள் படுகொலைகள் என மாவட்டத்தில் இப்பட்டியல்கள் நீண்டுகொண்டே செல்கின்றன என பாதிக்கப்பட்ட மக்கள் கூறியிருக்கின்றனர்.

இவ்வாறான மறக்க முடியாத சுவடுகளுக்கு நீதியான தீர்ப்பு அவசியமானதும், முக்கியமானதும் இதனை ஏன் ஐ.நா மனித உரிமைகள் சரியான கவனத்தில் எடுக்கவில்லைஎன்பது பெரும் கேள்வியாகவே மக்கள் மத்தியில் உள்ளது. இந்த மக்களிற்கு தீர்வாக எதிர்வரும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் பதிலாக இருக்குமா என்பதே அவர்களுடைய எதிர்பார்ப்பு. ■

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

33. மூன்று உணவுகளையும் விரும்புவோர் எத்தனை பேர்?
    1) 6 2) 7 3) 1

34. தோசையை மட்டும் விரும்புவோர் எத்தனை பேர்?
    1) 3 2) 1 3) 2


35. 1 லீற்றர் பெற்றோலில் 20 கிலோ மீற்றர் பயணம் செய்யும் வாகனமொன்று 120 கிலோமீற்றர் பயணம் செய்யத் தேவையான பெற்றோலின் அளவு யாது?
    1) 20 லீற்றர் 2) 6 லீற்றர் 3) 5 லீற்றர்

❖ **பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

36. பார்வை : கண், நுகர்தல் : ................................
    1) தோல் 2) நாக்கு 3) மூக்கு

37. அதிபர் : பாடசாலை, துணைவேந்தர் : ................................
    1) பல்கலைக்கழகம் 2) வங்கி 3) அலுவலகம்

❖ தரம் 5 இல் கல்வி கற்கும் 40 மாணவர்கள் பின்வரும் தினங்களில் வருகை தந்த விபரம் காட்டப்படுகிறது.




38. அரைவாசியிலும் அதிகமான மாணவர்கள் வருகை தந்த தினம் எது?
    1) வெள்ளி 2) வியாழன் 3) திங்கள்

39. 88 இன் அரைவாசியின், அரைவாசியுடன் 8 ஐக் கூட்டினால் வரும் விடை.
    1) 30 2) 52 3) 44

40. ஒழுங்கின்றிக் காணப்படும் பாடல் வரிகளை ஒழுங்குபடுத்துக.
    A - நறுக்கி வைத்த அறுகம்புல்
    B - நானிருப்பேன் என்றது
    C - முறுக்கு மீசை இல்லையென்று
    D - முணுமுணுத்துக் கொள்ளவே
    1) CDBA 2) CADB 3) CDAB

**01)** **பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

கண் சிமிட்டி மலரும் கமல மலர்களும் இதர மலர்களும் " தாயைக் கண்ட மழலையின் புன்முறுவல் " போல இதழ் விரித்து மலர்கின்றன. மலர்களின் வாசம் கண்டு அவைகளைச் சுற்றிச் சுற்றி ரீங்காரமிடும் வண்டினங்கள் ஒரு புறம், வண்ண வண்ண இறக்கைகளால் சிறகடித்துப் பறந்து திரியும் வண்ணத்துப் பூச்சிகள் மறுபுறம். இவை சிறுவர்களைப் போன்று பெரியவர்களையும் பரவசமடையச் செய்கின்றன.

i) இப்பந்தியில் வர்ணிக்கப்படும் காட்சியைக் குறிப்பிடுக.

..............................................................................................................

ii) இங்கு வந்துள்ள அடுக்குமொழிச் சொல்லொன்றை எழுதுக.

..............................................................................................................

iii) உவமைத் தொடர் ஒன்றை எழுதுக.

..............................................................................................................

iv) மணம் என்பதன் ஒத்த சொல்லை எழுதுக. ..............................................

v) ரீங்காரமிடும் என்பதனைப் பிரித்து எழுதுக..............................................

vi) உயர்திணைப் படர்க்கைப் பன்மைப் பெயர்ச் சொல் ஒன்றை எழுதுக.

..............................................................................................................

(6 x 1 =6 புள்ளிகள்)

**02)** தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியம் ஒன்றை எழுதுக.
ஏரிக்குச் / புள்ளிமான் / குடிப்பதற்காக / சென்றது / தண்ணீர்

..............................................................................................................

(1 புள்ளி)

## விடைகள்

| | | |
|---|---|---|
| 33. 1 | 36. 3 | 39. 1 |
| 34. 3 | 37. 1 | 40. 3 |
| 35. 2 | 38. 2 | |

**01.** 1) காலைக்காட்சி 2) வண்ண வண்ண, சுற்றிச் சுற்றி
3) "தாயைக் கண்ட மழலையின் புன்முறுவல் போல" / சிறுவர்களைப் போன்று
4) வாசம் 5) ரீங்காரம் + இடும் 6) சிறுவர்களை, பெரியவர்களை

**02.** புள்ளிமான் தண்ணீர் குடிப்பதற்காக ஏரிக்குச் சென்றது.

## கல்வி tv CHANNEL-1 — 11.02.2022 வெள்ளிக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

## கல்வி tv CHANNEL - 2 — 11.02.2022 வெள்ளிக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | Singalam |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

## சதகா அறக்கட்டளையால் புலமைப் பரிசில் திட்டம்!

மட்டக்களப்பு, பெப். 11

மட்டக்களப்பில் வாழ்வாதாரம் குறைந்த நிலையிலுள்ள பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு மாதாந்த புலமைப்பரிசில் நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் இந்த வருடத்துக்கான நிதி கையளிக்கப்பட்டது.

ஏறாவூர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் மட்டக்களப்பு மத்தி. வலயக் கல்விப் பணிப்பாளர் மருத்துவர் உமர் மௌலானா இந்நிகழ்வில் அதிதியாகக் கலந்துகொண்டார்.

சதகா அறக்கட்டளை நிதியம் இதற்கான நிதியினை வழங்கியதுடன் அறக்கட்டளை நிதியத்தின் தலைவர் எம். எஸ். அபுல் ஹசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் செயலாளர் எம். ஷாபி மற்றும் பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் தலைவர் எம். முகைதீன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது, ஏறாவூர் மற்றும் கோறளைப்பற்று மேற்கு கல்விக் கோட்டங்களின் பாடசாலை மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழகங்களில் உயர்கல்வியைத் தொடரும் மாணவர்கள் 22 பேர் நிதியுதவியைப் பெற்றுக்கொண்டதாக அறக்கட்டளை நிதியத்தின் செயலாளர் ஏ. எம். ஷாபி தெரிவித்தார். (ஐ)

# தமிழ்த் தேசியத்துக்காக கொடுத்த விலைக்கு என்ன கைமாறு கிடைத்தது?

## இப்படி கேட்கிறார் பெரமுனவின் மட்டு. அமைப்பாளர்

கிரான், பெப். 11

**தமிழ்த் தேசியத்தை நேசித்து பல விலையைக் கொடுத்தது இந்த கிரான் மண். ஆனால், தமிழ் தேசியத்திற்காக கொடுத்த விலைக்கு என்ன கைமாறு கிடைத்தது இப்படி கேள்வி எழுப்பியுள்ளார் பொதுஜன பெரமுனவின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் பரமசிவம் சந்திரகுமார்.**



அத்துடன், இன்னும் 10 வருடங்களுக்கு எந்த அரசியல் கட்சியாலும் பொதுஜன பெரமுனவின் ஆட்சியை அசைக்க முடியாது என்றும் அவர் கூறியிருக்கிறார்.

மட்டக்களப்பில் நீண்டகாலமாக புனரமைக்கப்படாத நிலையிலிருந்த கிரான் - குடும்பிமலை வீதி மற்றும் இலுப்பையடி சேனை- 5ஆம்கட்டை சந்தி வீதி, வேப்பவட்டுவான் வீதி ஆகியவற்றின் புனரமைப்பு பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டன.

இதன் ஆரம்ப நிகழ்வில் பங்கேற்றபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கை அரசாங்கம் அனைத்து அபிவிருத்தி வேலைத் திட்டங்களையும் முழு நாட்டுக்கும் சமனாகவே வழங்குகின்றது. இன வேறுபாடுகள் பார்க்காமல் பல்வேறு உதவி திட்டங்கள் வழங்கப்படுகின்றன. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்திற்கு எனக்கு மட்டுமே 8000 மில்லியன் ரூபாய் பெறுமதியான வீதிகள் ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஜனாதிபதி அனுராதபுரத்தில் விவசாயிகளுக்கு எந்த பாதிப்பையும் ஏற்படுத்த அனுமதிக்க மாட்டேன் என கூறியிருந்தார். விவசாயிகளின் கஷ்டங்களை உணர்ந்து அவர்களுக்கு தேவையானவற்றை வழங்க அரசாங்கம் தயாராகவுள்ளது. உரப்பிரச்னையை எதிர்கொண்டு நட்டத்தை எதிர்கொண்டவர்கள் தொடர்பில் ஆராய விசேட குழு அமைக்கப்பட்டுள்ளது. இதன் ஊடாக விவசாயிகளுக்கு நட்டஈடுகள் வழங்கப்படும்.

கொரனா தொற்று காரணமாக அரசாங்கம் தீர்மானித்த விடயங்களை செய்யமுடியாமல் போயிவிட்டது. சிலர் கூறுகின்றார்கள் ஆட்சிமாறும் என்று. ஆனால், இன்னும் 10வருடங்களுக்கு பொதுஜன பெரமுன கட்சியின் ஆட்சியை யாராலும் அசைக்கமுடியாது - என்றார். (ஐ)



## கொக்கட்டிச்சோலையில் காட்டு யானை தாக்குதல்!

மட்டக்களப்பு, பெப். 11

கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட விடுதிக்கல் கிராமத்தில் உள்ள காளிகாபுரம் வீட்டுத்திட்ட பகுதிக்குள் காட்டு யானை புகுந்து வீடுகள், பயிர்களை சேதமாக்கிய சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

இந்தப் பகுதிக்குள் திடீரெனப் புகுந்த காட்டு யானை வீட்டின் மதிலை உடைத்துள்ளதுடன், பயிர்களை சேதப்படுத்தி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அடை மழையால் அறுவடை பாதிப்பு

அக்கரைப்பற்று, பெப். 11

அம்பாறை மாவட்டத்தில் திங்கட்கிழமை பெய்த அடை மழை காரணமாக நாவிதன் வெளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட சடயந்தலாவை, சவளக்கடை விவசாயக் கண்டங்களின் நெல் அறுவடை பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இம்முறை, நெல் விளைச்சல் குறைவடைந்த போதும், நெல்லுக்கான விலை அதிகரித்துக் காணப்படுகிறது.

தனியார் 66 கிலோகிராம் கொண்ட ஒரு மூட்டை நெல்லை 4800 ரூபா முதல் 5000 ரூபா வரை கொள்வனவு செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



## நிலக்கடலை அறுவடை விழா திருக்கோவிலில் நடைபெற்றது

திருக்கோவில், பெப். 11

அம்பாறை - திருக்கோவில் தங்கவேலாயுதபுரம் மீள் குடியேற்ற கிராமத்தில் நிலக்கடலை அறுவடை விழா நேற்று முன்தினம் இடம்பெற்றது.

அரசாங்கத்தின் கிராமிய விவசாய உற்பத்திகளை மேம்படுத்தும் எண்ணக் கருவிற்கமைவாக கிழக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தால் மானிய விலையில் நிலக்கடலை விதைகள் வழங்கப்பட்டு மேட்டு நிலங்களில் அதிகளவான நிலக்கடலை உற்பத்திகள் முன்னெடுக்கப்பட்டன.

இதனடிப்படையில் தங்கவேலாயுதபுரத்தில் பயிரிடப்பட்டு இருந்த நிலக்கடலைகள் நேற்றுமுன்தினம் அறுவடை செய்யப்பட்டன.

இந்நிகழ்வில் லாகுகலை வலயத்தின் உதவி விவசாயப் பணிப்பாளர் எஸ். பரமேஸ்வரன் பாட விதான உத்தியோகத்தர் என். எம். ஆர். றஹல் விவசாயப் போதனாசிரியர் மோகனலெட்சுமி ஜெயராஜ் மற்றும் விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர். (ஐ)

## வேலூர் மைதானத்தின் சுற்றுமதிலுக்கு அடிக்கல்!

மட்டக்களப்பு, பெப். 11

மட்டக்களப்பு தேர்தல் தொகுதிக்கான விளையாட்டு மைதான சுற்றுமதிலுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

மட்டக்களப்பு - கல்லடி - வேலூர் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள வேலூர் மைதானத்துக்கு முதல் கட்டமாக 5 மில்லியன் ரூபாய் நிதியில் சுற்றுமதில் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு மாநகர சபை உறுப்பினர் எஸ். சுப்புராஜ் தலைமையில் நடைபெற்றது.



பலர் பங்கேற்ற இந்த நிகழ்வு, சுபீட்சத்தின் நோக்கு தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சாய்ந்மருது மருத்துவமனைக்கு நோயாளர் கட்டில் அன்பளிப்பு!

அம்பாறை சாய்ந்தமருது பிரதே ச வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவிற்கு நோயாளர் கட்டில் கையளிக்கப்பட்டது.

கொரோனா தொற்றைக் கருத்தில் கொண்டு சம்பத் சியபத பினான்ஸ் நிறுவனத்தால் நோயாளர் கட்டில் வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டது.

சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையின் மாவட்ட மருத்துவ அதிகாரி மருத்துவர் எம். எச். கே. சனூஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சம்பத் சியபத பினான்ஸ் நிறுவனத்தின் கிழக்குப் பிராந்திய முகாமையாளர் எம்.எச்.எம். பிறிம்சாத்,விலை முகாமையாளர்களான எம்.எச்.எம்.பாரீஹ், எஸ்.எம்.பாயிஸ், பிராந்திய முகாமையாளர் ஜே.எம்.எம் பிரியதர்சன், சாய்ந்தமருது வைத்தியசாலையின் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஏ.புஹாது ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ)

# அமெரிக்காவில் மான்களுக்கு ஒமைக்ரோன் வைரஸ் தொற்று

## விலங்குகளில் இருந்து புதிய திரிபுகள் தோன்றும் ஆபத்து?



நியூயோர்க், பெப். 11

நியூயோர்க்கில் பரவலாகக் காணப்படுகின்ற வெள்ளை வால் மான் இனங்களில் ஒமைக்ரோன் தொற்றுக்கள் இருப்பதை ஆராய்சி யாளர்கள் கண்டறிந்துள்ளனர். மான்களும் ஏனைய காட்டு விலங் குகளும் புதிய திரிபுகளை உரு வாக்க முடியும் என்று நம்புவதற் கான ஒரு சான்று இது என்று நிபு ணர்கள் அச்சம் கொண்டுள்ளனர்.

பென் பல்கலைக்கழக அறிவியலாளர்களும் லோவா மாநில இயற்கை வளத் திணைக்கள ஆராய்ச்சியாளர்களும் இணைந்து வெள்ளை வால் இன மான்களில் வைரஸ் பரிசோதனைகளை நடத்தி யுள்ளனர். அது தொடர்பான முதற்கட்ட பூர்வாங்க அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. நூற்றுக் கணக்கான மான்களில் பரிசோ தனை நடத்தப்பட்டது. அவற்றில் மூன்றில் ஒரு பங்கு மான்களின் உடல் திசுக்களில் ஒமைக்ரோன் வைரஸ் தொற்றுக்கான உடல் எதிர்ப்புத் தூண்டல்கள் அவ தானிக்கப்பட்டுள்ளன.

"நியூயோர்க் ரைம்ஸ்" பத்திரிகையின் தகவலின் படி, மான்களில் வைரஸ் நீண்டகாலம் - பரந்துபட்ட அளவில் - பரவு வதுஅவற்றில் புதிய மாறுபாடு கள் உருவாக அதிக வாய்ப்பாக அமையலாம் அதன் மூலம் தோன்றக் கூடிய புதிய வைரஸ் திரிபுகள் ஏனைய காட்டு விலங்கு களுக்கும் மனிதர்களுக்கும் பரவும் ஆபத்து உள்ளது - என்று தெரிவிக்கப்படுகிறது.

விலங்குகள் மனிதர்களைப் போன்று பரிசோதனைக்கு உள்ளாகு வதில்லை. அவற்றில் காணப்படு கின்ற திரிபுகள் சோதனைக்குள் பிடிபடாமல் நீண்டகாலம் மறைந்து பரவிப் பின்பு மரபு மாற்றங்களை உருவாக்குவதற்கு அது வாய்ப்பாகும் என்பதை நிபு ணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அமெரிக்காவில் சுமார் முப்பது மில்லியன் வெள்ளை வால் மான் கள் உள்ளன. வீட்டு வளர்ப்பு விலங்குகளைப் போல அன்றி அவை கூட்டமாக வாழ்வதால் அவற்றில் வைரஸ் வேகமாகப் பரவுவதற்கான வாய்ப்புகள் அதி கம். அத்துடன், அவை மனிதருக்கு நெருக்கமான பகுதி களில் நடமாடு கின்றன. எதிர்காலத்தில் அவற்றில் தோன்றக்கூடிய புதிய ஆபத்தான திரிபுகள் மனிதருக்குத் தொற்றுவ தற்கான ஏதுநிலை அதிகமாக உள்ளது. எலிகள், காட்டு அணில்கள், காட்டுப் பூனைகள், மிங் விலங்குகள் போன்றவற்றின் வரிசையில் மான்களும் வைரஸ் தொற்றுக்கு இலக்காகக் கூடிய தன்மை வாய்ந்த விலங்கினமாகப் பட்டியலிடப்பட்டுள்ளன. (ஐ)

# உரிமைகளுக்காக போராடிய ஆப்கான் பெண்கள் மாயம்!

காபூல், பெப். 11

ஆப்கானிஸ்தானில் பெண்களுக்கான உரிமைகளை வலியுறுத்தி போராட்டங்களில் ஈடுபட்ட பல பெண்கள் காணாமல் போயுள்ளனர் என்று அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த விடயங்களை பி.பி.சி. சர்வதேச செய்திச் சேவை அம்பலப்படுத்தியுள்ளது. அத்துடன், தலிபான்களின் பழிவாங்கல் கைதுகள் மற்றும் கொலைகள் பற்றிய ஆதா ரங்கள் உள்ளன என்றும் பி. பி. சி. தெரிவித்துள்ளது.

இதேவேளை, காணாமல் போனவர்கள் என்று கூறப்படும் பெண்கள் யாரும் தங்கள் பிடியில் இல்லை என்று தலிபான்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், கடந்த ஆட்சியில் அனைத்து விதமான செயல்பாடு களில் ஈடுபட்ட அனைவருக்கும் பொது மன்னிப்பு வழங்கியுள்ளதாகவும் தலிபான்கள் கூறியுள்ளனர். எனினும், ஆப்கானிஸ்தானில் உள்ள செயல்பாட்டா ளர்கள், ஊடகவியலாளர்கள், முன்னாள் அரச அதிகாரி கள் மற்றும் முன்னாள் பாதுகாப்புப் படையினருக்கு எதிரான பழிவாங்கும் போக்கு தொடர்வதாக ஐ. நா. சபை எச்சரிக்கை விடுத்துள்ளது - இவ்வாறான நிலை யில் மிகச் சமீபத்தில் ஆப்கானில் இடம்பெற்ற பல சம்பவங்கள் தொடர்பான பி.பி.சி. அறிக்கையிட்டுள் ளது.

இவ்வாறான சம்பவங்களில் சில கடந்த இரண்டு வாரங்களுக்குள் இடம்பெற்றுள்ளன எனவும் தெரி விக்கப்பட்டுள்ளது.

அண்மைக் காலத்தில் இடம்பெற்ற பெண்கள் காணாமல் ஆக்கப்பட்டமை உள்ளிட்ட உரிமைகள் மீறல்கள் குறித்து பாதிக்கப்பட்ட ஆப்கானி யர்கள் பலர் பி.பி.சிக்கு தகவல் தெரிவித்துள்ளனர்.


பாதுகாப்பு காரணங்களுக்காக அவர்களின் அடை யாளங்களை மறைத்து, இந்தத் தகவல்கள் வெளியிடப் பட்டுள்ளன. (ஐ)

# ஆண் குழந்தை பிறக்க கர்ப்பவதியின் தலையில் ஆணி அடித்த மருத்துவர்!

## பாகிஸ்தானில் கொடூரம்

இஸ்லாமாபாத், பெப். 11

பாகிஸ்தானில் கர்ப்பவதிப் பெண் ஒருவருக்கு ஆண் குழந்தை பிறக்க வேண்டுமென குறித்த பெண்ணின் தலையில் ஆணியை அடித்த உள்ளூர் மருத்துவர் ஒருவரை குறித்த பகுதி பொலிஸார் தேடி வருகின்றனர்.



பாகிஸ்தானின் பெஷாவர் நகரின் வடமேற்கு பகுதியில் உள்ள வைத்தியசாலைக்கு கடந்த சில நாட்களுக்கு முன்னர் பெண் ஒருவர் சென்று, தனது தலையில் இருந்த ஆணியை அப்புறப்படுத்த வேண்டும் என்று கோரினார். இதைக் கேட்டு அதிர்ச்சியடைந்த மருத்துவர்கள் தலையில் ஆணி எப்படி வந்தது எனக் கேள்வி எழுப்பியுள்ளனர்.

அப்போது அவர், "நான் கர்ப்பமாக இருக்கிறேன். இந்தப் பிரசவத்தில் தனக்கு ஆண் குழந்தை பிறக்க சடங்குகளைச் செய்யுமாறு உள்ளூர் மருத்துவரிடம் கேட்டேன். அவர் எனது தலையில் 5 சென்றிமீற்றர் அளவிலான ஆணிகள் ஐந்தை அடித்து அனுப்பி னார். அதனால் எனக்கு கடுமையான வலி ஏற்பட் டுள்ளது. எனவே அதை அகற்ற வேண்டும்" என்றார்.

அந்த ஆணிகள் மூளையை தொடவில்லை. ஆணி அறையப்பட்டதால் மிகுந்த வலியில் இருந்த பெண் முதலில் தானே ஆணியை அறைந்து கொண்டதாகக் கூறினார். பின்னர்தான் அவர் தலையில் ஆணியை அந்த வைத்தியர் அறைந்தது தெரியவந்ததாக மருத்து வர்கள் கூறினர்.

இதையடுத்து மருத்துவர்கள் அந்தப் பெண்ணின் தலையில் இருந்து ஆணியை அப்புறப்படுத்தி அனுப் பினர். இது குறித்து பொலிஸாருக்கு தகவல் கொடுக் கப்பட்டது. இதைத் தொடர்ந்து இந்த விடயம் குறித்து விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.(ஐ)



# உக்ரைன் – ரஷ்யா நெருக்கடிகளை இராஜதந்திர நடவடிக்கை தணிக்கும்!

மொஸ்கோ, பெப். 11

எந்த ஒரு நாட்டையும் ஆக்கிரமிக்கும் எண்ணத்தை ரஷ்யா கொண்டிருக்கவில்லை என்று தெரிவித்துள்ள ஐரோப் பிய ஒன்றியத்துக்கான ரஷ்ய தூதர் விளாடிமிர் சிசோவ், உக்ரைன் - ரஷ்யா நெருக்கடி களைத் தணிக்க இராஜதந்திர நடவடிக்கைகள் உதவும் என்று தனது நாடு இன்னும் நம்பு கிறது எனவும் கூறினார்.

திங்கள் மற்றும் செவ்வாய் கிழமைகளில் பதற்றத்தைத் தணிக்கும் வகையில் முன்னெ டுக்கப்பட்ட இராஜதந்திர நடவடிக்கைகளைத் தொடர்ந்து அவர் இதனைத் தெரிவித்தார்.

உக்ரைன் மீது படையெடுப் பதற்கான எந்த திட்டமும் இல்லை என ரஷ்யா தொடர்ந்து மறுத்து வருகிறது. எனினும் உக்ரைன் எல்லைக்கு அருகில் ஒரு இலட்சம் படை களை ரஷ்யா குவிந்துள்ளது.

இவ்வாறான நிலையில் உக் ரைன்மீது ரஷ்யா எந்த நேரத் திலும் தாக்குதலை தொடங்க லாம் என அமெரிக்கா உள் ளிட்ட சில மேற்குலக நாடுகள் எச்சரித்துள்ளன.

உக்ரைனின் கிரிமியா தீப கற்பத்தை 2014-ஆம் ஆண்டு ரஷ்யா கைப்பற்றி தன்னோடு இணைத்துக் கொண்டது. இதனை தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையான மோதல் அதிகரித்து வருகிறது. உக்ரைனுக்கு அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் ஆதரவு அளித்து வருகின்றன. மேலும், உக்ரைனை நேட்டோ அமைப் பில் உறுப்பினராக சேர்க்கவும் அமெரிக்கா மற்றும் ஐரோப் பிய நாடுகள் முயற்சித்து வரு கின்றன. ஆனால், உக்ரைன் நேட் டோவில் இணைந்தால் அது தனது நாட்டின் பாதுகாப் புக்கு அச்சுறுத்தலாக அமையும் என ரஷ்யா கருதுகிறது. (ஐ)

# சட்டவிரோத போராட்டத்தை தொடர்ந்தும் சகிக்கமுடியாது

## கனடா பிரதமர் எச்சரிக்கை

ஒட்டாவா, பெப். 11

கனேடிய தலைநகர் ஒட்டாவாவை முடக் கும் வகையில் சரக்கு வாகன சாரதிகள் கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாக மேற்கொண்டு வரும் போராட்டங்கள் சட்டவிரோதமானவை. இதனை தொடர்ந்தும் சகித்துக்கொள்ள முடி யாது என பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ கடுமை யாக எச்சரித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன் கிழமை பேசிய அவர், நாட்டின் தலைநகரில் சரக்கு வாகன சாரதிகளை ஒன்றிணைக்க தூண்டிய கட்டாய தடுப்பூசி ஆணை உள்ளிட்ட கோவிட் கட்டுப்பாடுகள் சரியான முடிவுதான் எனவும் கூறினார். போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் ஒட்டாவா பொலிஸாரால் கைது செய்யப்பட லாம். அத்துடன், அவர்கள் தங்கள் வேலையை இழக்க நேரிடும் எனவும் ட்ரூடோ எச்சரித்தார்.

ஒட்டாவாவிலும் இரண்டு கனடா-அமெ ரிக்க எல்லைக் கடவைகளிலும் இரண்டு வாரங் களுக்கு மேலாக போராட்டங்கள் நடந்து வருகின் றன. வீதி மறியல்கள், சட்டவிரோத ஆர்ப்பாட் டங்கள் ஏற்றுக்கொள்ள முடியாதவை. இந்தப் போராட்டங்கள் வணிகங்கள் மற்றும் உற்பத்தி யாளர்களை எதிர்மறையாக பாதிக்கின்றன என்று ட்ரூடோ கூறினார்.

இதேவேளை, கனடா அண்மையில் வாக னச் சாரதிகளுக்கு தடுப்பூசியை கட்டாயமாக்கி யது. இதற்கு எதிராக இந்தப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். இவர்களில் இவர் களில் சுமார் 80 வீதமானவர்கள் தடுப்பூசிகளை பெற்றுக்கொண்டுள்ளனர். 20 வீதத்துக்கும் குறை வானோரே - சுமார் ஒரு இலட்சத்து 60 ஆயிரம் பேர் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# பதற்றங்களுக்கு மத்தியில் ரஷ்யா - பெலாரஸ் பயிற்சி!

மொஸ்கோ, பெப். 11

உக்ரைன் உடனாக பதற்றங் ளுக்கு மத்தியில் உக்ரைனின் வடக்கில் உள்ள தனது நெருங்கிய நட்பு நாடான பெலாரஸ் உடன் இணைந்து 10 நாட்கள் கூட்டு இரா ணுவப் பயிற்சியை ரஷ்யா நேற்று வியாழக்கிழமை ஆரம்பித்தது.

இதில், சுமார் 30,000 ரஷ்ய துருப்புக்கள் பங்கேற்றனர். இது பதற்ற நிலையை மேலும் அதிகரித் துள்ளது. எவ்வாறாயினும், தற் போது பெலாரஸில் நிறுத்தப்பட் டுள்ள ரஷ்ய துருப்புக்கள் பயிற்சிகளுக்குப் பிறகு தங்கள் நிரந்தர தளங்களுக்கு திரும்புவார்கள் என ரஷ்ய ஜனாதிபதி மாளிகையான கிரெம்ளின் செய்தித் தொடர்பாளர் சிசோவ் தெரிவித்துள்ளார்.

இதேநேரம் பிராந்தியத்தில் அதி கரித்துள்ள பதற்றங்களுக்கு மத்தி யில் ரஷ்யா - பெலாரஸ் கூட்டு இராணுவப் பயிற்சி மேலும் நெருக்கடிகளை உருவாக்கும் என வெள்ளை மாளிகையின் செய்தித் தொடர்பாளர் ஜென் சாகி கூறி னார். (ஐ)

# மேற்கிந்தியாவுக்கு எதிரான தொடரை வென்றது இந்தியா!

அஹமதாபாத், பெப். 11

மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியை 44 ஓட்டங்களால் வெற்றி கொண்ட இந்திய அணி தொடரைக் கைப்பற்றியது.

நேற்று முன்தினம் நடந்த இந்தப் போட்டியில் சூர்யகுமார் யாதவின் 64 ஓட்டங்கள் மற்றும் பிரசித் கிருஷ்ணாவின் நான்கு விக்கெட்கள் என்பன இந்திய அணியின் வெற்றிக்கு முக்கிய பங்காற்றின.



இரு அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டி அஹமதாபாத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத்தீவுகள் முதலில் களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா 50 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 237 ஓட்டங்களை எடுத்தது. சூர்யகுமார் யாதவ் 64 ஓட்டங்களையும் கே. எல். ராகுல் 49 ஓட்டங்களையும், வாஷிங்டன் சுந்தர் 24 ஓட்டங்களையும், தீபக் ஹூடா 29 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றனர்.

238 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் மேற்கிந்தியத்தீவுகள் அணி களமிறங்கியது.

இந்திய பந்துவீச்சாளர்களின் அசத்தலான பந்து வீச்சால் மேற்கிந்தியத்தீவுகளின் விக்கெட்டுகள் சீரான இடைவெளியில் வீழ்த்தப்பட்டன.

இறுதியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 46 ஓவர்களில் 193 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

மேற்கிந்தியத்தீவுகள் சார்பில் ஷமார் புரூக்ஸ் 44 ஓட்டங்களையும், அகேல் ஹூசைன் 34 ஓட்டங்களையும், ஷாய் ஹோப் 27 ஓட்டங்களையும், ஒடியன் ஸ்மித் 24 ஓட்டங்களையும் எடுத்தனர்.

இதன் மூலம் 44 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்தியா வெற்றி பெற்றது.

அத்துடன், ஒருநாள் தொடரை 2-0 என கைப்பற்றியது. இந்தியா சார்பில் பந்து வீச்சில் பிரசித் கிருஷ்ணா 4 விக்கெட்களையும், ஷர்துல் தாகூர் 2 விக்கெட்டுகளையும் அதிகபடியாக எடுத்தனர்.

இந்த வெற்றியின் மூலம் இந்தியா மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 2:0 என்ற கணக்கில் கைப்பற்றியது.




## தேசிய சுப்பர் லீக்கில் நுவனிந்து 2ஆவது சதம்!

கொழும்பு, பெப். 11

தேசிய சுப்பர் லீக் கிரிக்கட் போட்டியில் கொழும்பு வீரர் நுவனிந்து பெர்னாண்டோ தொடர்ச்சியாக இரண்டாவது தடவையாகவும் சதம் விளாசியுள்ளார்.

பல்லேகலை சர்வதேச மைதானத்தில் நேற்று நடைபெற்ற போட்டியில் கண்டி அணிக்கு எதிரான ஆட்டத்தில் அவர் இரண்டாவது முறையாகவும் சதம் விளாசினார்.

மூன்றாவது வீரராகக் களமிறங்கிய நுவனிந்து மொத்தமாக 133 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர் மற்றும் 7 பௌண்ட்ரிகளுடன் 112 ஓட்டங்களைப் பெற்றார். இந்த சதத்தின் மூலம் இந்த ஆண்டு தேசிய சுப்பர் லீக்கில் அதிக சதம் அடித்த துடுப்பாட்ட வீரர் என்ற பெருமையையும் பெற்றார்.

இதற்கு முன்னதாக அவர் தம்புள்ளை அணிக்கு எதிரான போட்டியில் சதம் விளாசியிருந்தார்.

6 போட்டிகளில் விளையாடிய நுவனிந்து 2 சதம் மற்றும் ஒரு அரைச்சதத்துடன் 328 ஓட்டங்களை குவித்துள்ளார்.

நுவனிந்துவின் இனிங்ஸ் சராசரி 54.66 ஆகும் இதே வேளையில் அவரது அதிகபடியான ஓட்ட எண்ணிக்கை 112 ஆகும்.

நுவனிந்துவின் சதம் இந்த சீசனில் பதிவான 5 ஆவது சதம் ஆகும்.

முன்னதாக, ஓஷத பெர்னாண்டோ (138), தனஞ்சய டி சில்வா (102), சித்தர கிம்ஹான் (110), நுவனிந்து பெர்னாண்டோ (100) ஆகியோர் சதம் விளாசினர்.

நுவனிந்துவின் இனிங்ஸால் கண்டிக்கு எதிரான இன்றைய போட்டியில் கொழும்பு அணி 49.3 ஓவர்களில் 271 ஓட்டங்களை எடுத்தது.

## குளிர்கால ஒலிம்பிக் போட்டி; தங்கம் வென்றார் பெட்ரா!

பீஜிங், பெப். 11

பீஜிங் குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் அல்பைன் ஸ்கீயிங் விளையாட்டு பிரிவில் ஸ்லோவாகியாவுக்கு முதல் தங்கத்தை வென்றார் பெட்ரா வோல்ஹோவா.

சீனாவின் பீஜிங் நகரில் 24ஆவது குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. போட்டியின் 5ஆவது நாளான புதன்கிழமை 6 பிரிவுகளில் பதக்கத்துக்கான சுற்றுகள் நடைபெற்றன.

இதில், மகளிருக்கான அல்பைன் ஸ்கீயிங் விளையாட்டில் ஸ்லோவாகியாவின் பெட்ரா வோல்ஹோவா பந்தய இலக்கை 1 நிமடம் 44: 98 விநாடிகளில் கடந்து தங்கப் பதக்கம் வென்றார். இது, இந்த ஒலிம்பிக் விளையாட்டுப் பிரிவில் ஸ்லோவாகியா வெல்லும் முதல் தங்கப் பதக்கம் என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்ததாக ஆஸ்திரியாவின் கேத்தரினா லின்ஸ்பெர்கர் 1 நிமிடம் 45:06 விநாடிகளில் வந்து வெள்ளியும், அவரை விட 0:4 விநாடிகள் தாமதமாக வந்த சுவிற்சர்லாந்தின் வெண்டி ஹோல்டனர் வெண்கலமும் வென்றனர்.






## ஆஸியுடனான டெஸ்ட் பாக். அணி அறிவிப்பு!

இஸ்லாமாபாத், பெப். 11

அவுஸ்திரேலியாவுக்கு எதிராக 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் சொந்த மண்ணில் விளையாட இருக்கும் பாகிஸ்தான் அணியில் ஹரிஸ் ரவூப், ஷான் மசூத் ஆகியோர் மீண்டும் டெஸ்ட் அணியில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். இந்தத் தொடர் வரும் மார்ச் 4ஆம் தேதி தொடங்குகிறது.

அணி விவரம்: பாபர் அஸாம் (தலைவர்), முஹமது ரிஸ்வான், அப்துல்லா ஷபிக், அஸார் அலி, பஹீம் அஷ்ரப், பவாத் அலம், ஹரிஸ் ரவூப், ஹசன் அலி, இமாம் உல் ஹக், முகமது நவாஸ், நௌமன் அலி, சஜித் கான், சௌத் ஷகீல், ஷாஹீன் ஷா அப்ரிடி, ஷான் மசூத், ஷகிட் மஹ்மூத்.

## "குஜராத் ரைட்டன்ஸ்" புதிய அணியின் பெயர்!

புதுடில்லி, பெப். 11




புதிதாக சேர்க்கப் பட்டுள்ள அஹம தாபாத் ஐ. பி. எல். அணியின் பெயரை அணி நிர்வாகம் புதன்கிழமை அறிவித்தது.

ஐ. பி. எல். போட் டியில் லக்னோ, அஹமதாபாத் நகரங்களை அடிப்படையாகக் கொண்டு இரு புதிய அணிகள் இணைகின்றன.

அஹமதாபாத் அணியைச் சர்வதேச பங்கு முதலீட்டு நிறுவனமான சி. வி. சி. கப்பிட்டல், 5,600 கோடி ரூபாய்க்கு சொந்தமாக்கியது. இந்த நிறுவனம் ஏற்கனவே கடந்த 2016-17 காலகட்டத்தில் ரைசிங் புனே சுப்பர் ஜெயன்ட் அணி உரிமையாளராக இருந்தது.

இந்நிலையில், அஹமதாபாத் அணிக்கு குஜராத் ரைட்டன்ஸ் எனப் பெயரிடப்பட்டுள்ளது.

# ரொனால்டோ புதிய சாதனை!

லண்டன், பெப். 11

பிரபல உதைபந்தாட்ட வீரர் கிறிஸ்ரியானோ ரொனால்டோ இன்ஸ்ட்ராகிராமில் அதிக பின் தொடர்பவர்களை பெற்ற முதல் நபர் என்ற சாதனையைப் படைத்துள்ளார்.

உதைபந்தாட்ட நட்சத்திர வீரரான கிறிஸ்ரியானோ ரொனால்டோ உலகம் முழுவதும் பிரபலமான விளையாட்டு வீரர்கள் பட்டியலில் முதலிடத்தில் இருப்பவர்.

இந்நிலையில், சமூக வலைதளங்களில் ஒன்றான இன்ஸ்ட்ராகிராமில் அவரைப் பின் தொடர்பவர்களின்

எண்ணிக்கை 40.1 கோடியாக உயர்ந்துள்ளது.

இதனால், உலகளவில் இன்ஸ்ட்ராவில் அதிக பின் தொடர்பாளர்களைக் கொண்ட முதல் நபர் என்கிற புதிய சாதனையை ரொனால்டோ அடைந்துள்ளார்.

தற்போது, ரொனால்டோ மன்செஸ்டர் யுனைற்றெட் கழகத்துக்காக விளையாடி வருகிறார். (ஐ)



# பொது மக்களிடம் அரசாங்கம் உண்மையை கூறவேண்டும்!

## திஸ்ஸ விதாரண எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, பெப். 11

நாட்டின் பொருளாதார நிலைமை குறித்து அரசாங்கம் பொது மக்களிடம் வெளிப்படைத்தன்மையுடன் உண்மையை குறிப்பிட வேண்டும். ஆனால், எந்தப் பிரச்னைகளும் இல்லாதது போன்று அரசாங்கம் செயல்படுகிறது என லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.



கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், கோவிட் தாக்கத்தின் பின்னரான காலப்பகுதியில் நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது என குறிப்பிடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. பொருளாதார பாதிப்புக்கு பல்வேறு காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன.

பொருளாதார பாதிப்புக்கு தீர்வுகாண நீண்டகால கொள்கைத் திட்டம் வகுக்கப்படவில்லை. குறுகிய கால திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. தற்காலிக கொள்கை திட்டங்களால் நாட்டு மக்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் அரச நிர்வாகத்தை முன்னெடுக்க முடியாது. நாட்டின் பொருளாதார நிலைமை குறித்து அரசாங்கம் பொது மக்களிடம் வெளிப்படைத் தன்மையுடன் உண்மையை குறிப்பிட வேண்டும்.

ஆனால், எந்தப் பிரச்னைகளும் தோற்றம் பெறவில்லை என்ற நிலைப்பாட்டில் இருந்து கொண்டு அரசாங்கம் செயல்படுகிறது. நாட்டு மக்கள் பொருளாதார மற்றும் சமூக பிரச்னைகளை எதிர்கொண்டுள்ளார்கள். வீதி அபிவிருத்தி உள்ளிட்ட பெரும் அபிவிருத்தி பணிகளை தற்காலிகமாக இடைநிறுத்தி மக்களுக்கு நிவாரணம் வழங்கும் திட்டங்களை செயல்படுத்துமாறு அரச தலைவர்களிடம் பலமுறை தனிப்பட்ட முறையில் வலியுறுத்தியுள்ளேன். எமது கருத்துக்களுக்கு அரசாங்கத்தில் மதிப்பளிக்கப்படவில்லை - என்றார்.

(ஐ)

# அறிகுறிகளற்ற தொற்றாளர்கள் சமூகத்தில் அதிகம் இருக்கலாம்!

## மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத்

கொழும்பு, பெப். 11

நாட்டில் நாளாந்தம் அதிகரித்துச் செல்லும் மரணங்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிட்டு மதிப்பிடும்போது, சமூகத்திற்குள் தொற்று அறிகுறிகளற்ற வைரஸை பரப்பக்கூடிய தொற்றாளர்கள் பெருமளவில் காணப்படலாம் என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

ஒமைக்ரோன் தொற்றால் பெரிய பாதிப்புக்கள் எவையும் ஏற்படாது என்ற நிலைப்பாட்டில் பெருமளவானோர் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றாமல் அசமந்தமாக செயற்படுவதே இதற்கான காரணமாகும்.

எனவேதான் சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றுவதையும், உரியவாறு தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்வதையும் தவிர்க்க வேண்டாம் என்று தொடர்ந்தும் வலியுறுத்துவதாகவும் அவர் கூறினார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

(ஐ)

# எமது கரையோரங்களை ஆக்கிரமிக்கவே அரசாங்கம் திட்டமிட்டு செயல்படுகின்றது

## கஜேந்திரன் எம்.பி. குற்றச்சாட்டு



கொழும்பு, பெப். 11

வட பகுதியில் இருக்கும் எங்களின் மீனவர்களை கடற்றொழிலில் இருந்து வெளியேறச் செய்து அந்த கரையோர பிரதேசத்தை சிங்கள, பௌத்த பிரதேசங்களாக மாற்ற அரசாங்கம் திட்டமிட்டு செயற்படுகின்றது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

கடந்த சில வாரங்களாக வட பகுதி கடலில் எல்லை தாண்டி வந்த படகுகளாலும் மற்றும் தென்பகுதியில் இருந்து வருகிறவர்களாலும் எங்களின் மீனவர்கள்மீது மேற்கொள்ளப்படுகின்ற தாக்குதல்கள் காரணமாக மீனவர்கள் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

எல்லைதாண்டி வந்த ட்ரோலர் படகு மோதியதில் காணாமல் போன இரண்டு மீனவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இலங்கைக் கடற்படையினர் பார்த்துக்கொண்டிருக்க தக்கதாகவே எல்லைமீறல்கள் நடந்துள்ளன. இது இன்று நேற்று அல்ல கடந்த 13 வருடங்களாக எங்களின் மீனவர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

வட பகுதியில் இருக்கும் எங்களின் மீனவர்களை கடற்றொழிலில் இருந்து வெளியேறச் செய்து கரையோரத்தை சிங்கள - பௌத்த பிரதேசங்களாக மாற்ற இலங்கை அரசு திட்டமிட்டு செய்யும் நடவடிக்கையே இது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் உறுதுணையாக இருந்து இந்த அழிவுகளுக்கு துணைபோகின்றார்.

இவ்வாறான செயல்பாடுகள் காரணமாக யாழ். மாவட்டத்தில் 23 ஆயிரம் மீனவக் குடும்பங்கள் வாழ்வாதம் இழந்து பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன், வடபகுதியில் 50 ஆயிரம் மீனவ குடும்பங்கள் வாழ்வாதரம் இழந்து தவிக்கின்றனர்.

கடந்த 31 ஆம் திகதி இரண்டு மீனவர்கள் கொல்லப்பட்டத்தை தொடர்ந்து மீனவர்கள் கடலுக்கு செல்வதை நிறுத்தி கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். அந்த மீனவர்கள் தொழிலுக்கு செல்லாது விட்டபோதும் - அவர்களின் குடும்பங்கள் பசியில் வாடிய போது கடற்றொழில் அமைச்சர் அவர்களை திரும்பியும் பார்க்கவில்லை.

வாக்குகளுக்காக வாக்குறுதிகளை வழங்கி மக்களை ஏமாற்றி செய்யப்பட்டு இந்த அரசுக்கும் கடற்படைக்கும் வெள்ளையடிக்கும் செயல்பாடுகளையே அவர் செய்கின்றார் - என்றார்.

# மஞ்சளுக்கு ரூ. 165 உத்தரவாத விலை

கொழும்பு, பெப். 11

ஏற்றுமதி விவசாய திணைக்களம் மற்றும் இலங்கை பலசரக்கு சந்தைப்படுத்தல் சபை என்பன இணைந்து கம்பஹா, கேகாலை மற்றும் இரத்தினபுரி மாவட்ட விவசாயிகளிடமிருந்து ஒரு இலட்சம் கிலோகிராம் மஞ்சளை கொள்வனவு செய்துள்ளது.

ஒரு கிலோகிராம் தலா 165 ரூபாய் என்ற விலையில் கொள்வனவு செய்யப்படும் மஞ்சள் தூள் பதப்படுத்தப்பட்டு பலசரக்கு சந்தைப்படுத்தல் சபையின் விற்பனை நிலையங்கள் மூலம் நியாயமான விலையில் நுகர்வோருக்கு விற்பனை செய்யப்படும் என சிறு தோட்ட பயிர்ச் செய்கை அபிவிருத்தி மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

(ஐ)

# 'கோப்' தலைவராக மீண்டும் சரித ஹேரத்!

கொழும்பு, பெப். 11

கோப் எனப்படும் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் தொடர்பான பாராளுமன்றக் குழுவின் தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத், மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்தாக கோப் குழுவின் தலைவராக செயல்பட்டுவந்த, பேராசிரியர் சரித ஹேரத், மீண்டும் அந்தப் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

(ஐ)

**சிவபூமி மனவிருத்தி பாடசாலைகளுக்கான**

**புதிய மாணவர் அனுமதி**

கோண்டாவில், கிளிநொச்சி மனவிருத்திப் பாடசாலைகளுக்கான புதிய மாணவர் அனுமதி விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

- **இப்பாடசாலைகளில் விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர்களால் கற்பித்தலும், தொழில்பயிற்சியும் நடைபெறுகிறது.**
- **மாணவர்களுக்கான போக்குவரத்து சேவையும் நடைபெறுகிறது.**

தொடர்புகளுக்கு : **தலைமையகம்**
**சிவபூமி மனவிருத்திப் பாடசாலை,**
**கோண்டாவில்.**
**021 222 7938**

# பயங்கரவாத சட்ட திருத்தம் அமைச்சர் பீரிஸ் மழுப்புகிறார்!

## ரவூப் ஹக்கீம் எம். பி. சாடல்

கொழும்பு, பெப். 11

பயங்கரவாத தடைச்சட்டத்தின் திருத்தச் சட்டமூலத்தில் ஐரோப்பிய நாடுகள் கேட்டுள்ள திருத்தங்கள் இடம்பெற்றுள்ளனவா என்பது தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் மழுப்புகிறார் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் எம். பியுமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற குற்றவியல் நடவடிக்கை முறைச்சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

நீதித்துறை சுயாதீனமானது. அதில், யாரும் செல்வாக்கு செலுத்துவதில்லை என நீதி அமைச்சர் சபையில் தெரிவித்தார். அவர் தெரிவித்த கருத்து உண்மை. ஆனால், 20ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டதன் மூலம் நிறைவேற்று அதிகாரிக்கு, நீதித்துறையில் அதிகாரம் செலுத்த முடியுமாகி இருக்கின்றது. மறைமுகவாகவே நிறைவேற்று அதிகாரியின் தலையீடு நீதித்துறையில் ஏற்படுகின்றது. அதனால்தான் 20ஆவது திருத்தச் சட்டத்தை அனைவரும் எதிர்க்கின்றனர்.

பயங்கரவாத தடைச் சட்டம் எவ்வாறு துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றது என்பது தொடர்பாக சர்வதேச நாடுகளில் குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் பேசி வருகின்றனர். முக்கியமான சரத்துக்கள் பயங்கரவாத தடைச்சட்டத்தில் திருத்தப்படவில்லை என அந்த நாடுகள் கூறுகின்றன. இதனால் பயங்கரவாத தடைச்சட்ட திருத்தத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்களை அவை குறிப்பிட்டிருக்கின்றன.

அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் பயங்கரவாத தடைச்சட்டத்தின் திருத்தச் சட்டமூலத்தை சபைக்கு சமர்ப்பித்திருந்தார். இதன்போது ஐரோப்பிய நாடுகள் கேட்டுக்கொண்டுள்ள திருத்தங்கள் தொடர்பில் கேட்டபோது அவர் மழுப்பும் வகையில் பதிலளித்தார். அதனால் எவ்வாறான திருத்தங்கள் மேற்கொள்ளப்போகின்றன என்பதை பார்ப்போம்.

அத்துடன், மனித உரிமைகள் ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்ற உபகுழுவில் மனித உரிமைவாதி அம்பிகா சற்குருநாதன் தெரிவித்திருந்த கருத்தை இலக்கு வைத்து வெளிவிவகார அமைச்சு அவருக்கு எதிராக கருத்து தெரிவித்திருக்கின்றது. பயங்கரவாத தடைச்சட்டம் மிகவும் மோசமான முறையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது - என்றும் அவர் கூறினார்.

## பயங்கரவாத தடை...

டுள்ளன. எனவே, பயங்கரவாத தடைச் சட்டத்தை முழுமையாக நீக்க அல்லது முழுமையாக மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்ட மூலம் மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வெளிவிவகாரத்துறை அமைச்சர் பயங்கரவாத தடை சட்டத்தில் திருத்தங்களை முன்வைக்கும் சட்டமூலத்தை சபையில் முன்வைத்துள்ளார். இந்த சட்டம் 1979 ஆம் ஆண்டு தற்காலிக சட்டமாக ஆறு மாதங்களுக்கு நடைமுறைப்படுத்துவதாக கூறியே அரசாங்கம் கொண்டுவந்ததாக பத்திரிகைகளில் வாசித்தோம். இதுவொரு தற்காலிக சட்டமூலம் எனவும், ஆறுமாத காலத்திற்கே இது நடைமுறையில் இருக்கும் எனவும் கூறினாலும் இன்றுவரை 42 ஆண்டுகளாக இந்த சட்டத்துடன் வாழ வேண்டியேற்பட்டது.

சர்வதேச சமூகத்தின் வலியுறுத்தல்களுக்கு அமையவும், புதிய சட்டம் கொண்டுவரப்பட வேண்டும் என வலியுறுத்தியதற்கு அமையவுமே இப்போது வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் திருத்த சட்டமூலத்தை முன்வைத்துள்ளார். இதற்கு மறுசீரமைப்பு என பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளது. கடந்த பத்து நாட்களுக்கு முன்னர் அமைச்சரை நான் யாழ்ப்பாணத்தில் சந்தித்த வேளையிலும், மறுசீரமைப்பு என்ற வார்த்தைக்கு புதிய அர்த்தம் தேடவேண்டியுள்ளது என் பதையும் சுட்டிக்காட்டியிருந்தேன். அதனை அவர் மறுக்கவும் இல்லை.

இந்த திருத்த சட்டத்தில் புதிதாக எதுவுமே மறுசீரமைக்கப்படவில்லை. இங்கு திருத்தங்கள் எனக் கூறப்பட்டுள்ள சகல விடயங்களும் ஏற்கனவே அவ்வாறே உள்ளன . 18 மாதங்களாக தடுத்து வைக்கப்பட முடியுமென்பதனை 12 மாதங்களாக குறைக்க நடவடிக்கை எடுத்ததாக கூறுகின்றனர், எமக்கு தெரிய 18 ஆண்டுகளுக்கு மேலாக சிலர் பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் இன்றும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

ஒரு சிலரை பிணையில் விடுவிக்க நடவடிக்கை எடுத்துள்ளீர்கள், சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். அவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளமை மகிழ்ச்சியளிக்கின்றது. கவிஞர் அஹ்னாபும் விடுவிக்கப்பட்டுள்ளார். ஆனால், இந்த விடுதலைகளும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை மற்றும் ஏனைய அமைப்புகள் மூலமாக பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டு இவர்களின் பெயர்கள் சுட்டிக்காட்டப்பட்டதன் காரணமாகவே இடம்பெற்றுள்ளன. ஆனால், மேலும் பலர் இவ்வாறு உள்ளனர், இருபது, இருபத்தைந்து, முப்பது ஆண்டுகளாக உள்ளனர். குறைந்தபட்சம் 300-400 பேர் இன்றைய சூழ்நிலையிலும் பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் . அவர்கள் குறித்து எவரும் பேசுவதில்லை. ஒரு சிலரின் வழக்குகளே எப்போதும் பிரபல்யமாக பேசப்பட்டுள்ளன. எனவே பயங்கரவாத தடைச் சட்டத்தை முழுமையாக நீக்க அல்லது முழுமையாக மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே எமது கோரிக்கை- என்றார். (ஐ)

## சொந்த நாடு...

யும் இலங்கை அரசுமே பொறுப்புக்கூற வேண்டும்", என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

வடக்கு மாகாண மீனவர்கள் தமது நாளாந்த வாழ்வாதாரத்தை இழக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. எமது கடற்பரப்பிற்கு அப்பால் உள்ள மக்கள் எமது எல்லைக்குள் வருவதுடன் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடுகின்றனர்.

வடக்கு மாகாணத்தை சாராத இலங்கை மீனவர்கள் இலங்கை கடற்படை மற்றும் படைகளின் அனுமதியுடன் வருவதுடன், சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடுவதனால் எமது உள்ளூர் மீனவர்கள் அதிக துன்பங்களை எதிர்கொள்ள நேர்ந்துள்ளது. அதேபோல் தமிழ்நாடு மீனவர்கள் சட்ட விரோதமாக எமது எல்லைக்குள் வருகை தந்து மீன்பிடியில் ஈடுபடுவது குறித்தும் தொடர்ச்சியாக நாம். மீன்பிடித்துறை அமைச்சின் குழுக்களிலும், பல சந்தர்ப்பங்களில் பாராளுமன்றத்திலும் முறையிட்டுள்ளோம்.

தமிழர்களின் காணிகளை அபகரித்து ஓர் ஆக்கிரமிப்பு படையாக இங்கே இருக்கின்ற இலங்கை கடற்படை, தமிழ் மீனவர்கள் மீதான இந்த அத்துமீறல்களை அனுமதிப்பதன் மூலம் வடக்கு, கிழக்கு மீனவ சமூகத்தை மேலும் மேலும் வறுமைப்படுத்தி அவர்களை இந்த பகுதியில் இருந்து தாமாகவே வெளியேறப் பண்ணும் ஓர் இனப்படுகொலை நிகழ்ச்சி நிரலாகவே நான் இதை பார்க்கிறேன். அரசின் இந்த பாராமுகம் திட்டமிட்ட இனப்படுகொலை நிகழ்ச்சி நிரலின் ஓர் அங்கமே .

இந்திய மீனவர்களின் அத்துமீறல் குறித்து நாம் கொண்டுவரவிருந்த ஒத்திவைப்பு பிரேரணையை ஒத்திவைக்கு மாறும் தாம் இந்த விடயம் குறித்து உடனடியாக காத்திரமான நடவடிக்கை எடுப்பதாகவும் இந்திய தூதரகம் எமக்கு அறியத்தந்திருக்கிறது. இதேவேளை , இந்தவிடயத்தில் உண்மையில் சொந்த நாட்டு மக்களின் பாதுகாப்பு குறித்து உத்தரவாதப்படுத்த வேண்டிய இலங்கை அரசு ஒன்றுமே செய்யாதிருக்க, வெளிநாடு ஒன்று இந்த விடயத்தில் உத்தரவாதம் தரவேண்டிய நிலைமை இங்கு நிலவுகிறது - என்றார். (ஐ)

## மஹிந்த விடுத்த...

மரிக்கார் இந்த அறிவிப்பை விடுத்தார்.

“அச்சம் காரணமாகவே அரசு தேர்தலை ஒத்திவைத்துள்ளது. எனவே, பிரதமரின் சவாலை நாம் ஏற்கின்றோம். தேர்தலை நடத்துமாறு அவருக்கு சவாலும் விடுக்கின்றோம். நாமும் அடுத்த மாதம் மக்கள் சந்திப்பை நடத்தவுள்ளோம்.” - என்றும் மரிக்கார் குறிப்பிட்டார். (அ)

## தனிமைப்படுத்தல்...

சாதாரணமாக இருப்பதுடன், அதன் பின் அவர்கள் வேலைக்கு செல்லலாம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் சுகாதாரப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, முன்னர் தனிமைப்படுத்தல் காலம் 14 நாட்களாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வவுனியா...

அதனை வைபவ ரீதியாக திறந்து வைக்கவுள்ளார்.

இந்நிலையில் பல்கலைக்கழகத்துக்கு நுழைவாயில் ஊடாக உட்சென்று பல்வேறு பீடங்களுக்கும் பிரிந்து செல்லும் பிரதான பகுதியில் முக்கோண வடிவில் பல்கலைக்கழகத்தின் பெயருடன் கூடிய கல்வெட்டு காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

வீதியில் இருந்து உட்செல்லும்போது காட்சிக்கு புலப்படும் வகையில் தமிழ் மொழியும், மற்றைய இரு பங்கங்களில் சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

ஜனாதிபதியின் வருகையை முன்னிட்டு வீதியில் இருந்து பல்கலைக்கழகத்துக்குள் செல்லும்போது பீடங்களுக்கு பிரிந்து செல்லும் பிரதான பகுதியில் தமிழ்மொழியில் காட்சி கொடுத்த கல்வெட்டு அவசர அவசரமாக அகற்றப்பட்டு மறுபக்கம் மாற்றப்பட்டுள்ளதுடன், முன் பகுதியில் சிங்களமொழி கல்வெட்டும் காட்சிப்படுத்தப்பட்டது. (அ)

# வவுனியா வைத்தியசாலையில் இன்று முதல் பி.சி.ஆர் சோதனை

வவுனியா, பெப்.11

வவுனியா பொது வைத்தியசாலையில் இன்று வெள்ளிக்கிழமை முதல் பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதுவரை காலமும் வவுனியா மாவட்டத்தின் பிசிஆர் பரிசோதனைக்காக மாதிரிகள் யாழ்ப்பாணம் மற்றும் அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டே, அதற்குரிய முடிவுகள் பெறப்பட்டு வந்தன.

கடந்த ஒகஸ்ட் மாதமளவில் மத்திய அரசினால் வவுனியா வைத்தியசாலைக்கு 35 மில்லியன் ரூபாய் பெறுமதியான பி.சி.ஆர் ஆய்வுகூடத் தொகுதிவழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கொரோனாவுக்கு...

வயதுக்கு மேற்பட்டவர்களில் 14 ஆண்களும் 12 பெண்களுமாக 26 பேரும் உயிரிழந்தனர்.

இந்நிலையில், நாட்டில் கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 15 723 ஆக உயர்வடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## யாழ்.பல்கலைக்...

போராட்டத்தில் ஈடுபடவுள்ளமை குறித்த அறிவிப்பை முன்னதாக யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் த.சிவரூபன் விடுத்திருந்தார்.

பல்கலைக்கழக ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பை வலியுறுத்தி இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நேற்று முற்பகல் 11 மணியளவில் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினரால் ஊழியர் சங்கப் பொது அறையில் பணியாளர்களுக்கான விளக்கக்கூட்டம் நடத்தப்பட்டது.

அதன் பின்னர் பல்கலைக்கழக பிரதான வாசலில் கவனயீர்ப்புப் போராட்டமும் முன்னெடுக்கப்பட்டது.

இந்த போராட்டத்தினால் யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று நடைபெறவிருந்த பரீட்சைகளும் கூட்டங்களும் ஒத்திவைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-03)

## இந்திய நிகழ்ச்சி...

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இழுவை மடி தொடர்பில் விசேட பிரேரணை ஒன்று, தமிழ்த் தேசிய மக்கள் முன் னணி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருந்தது.

இந்நிலையில், இந்தியத் தூதரக அதிகாரி ஒருவர் அந்தப் பிரேரணையை பாராளுமன்றத் தில் கொண்டு வரவேண்டாம் எனக் கோரியதற்கு அமைய அந்த பிரேரணை முன்னணியால் கைவிடப்பட்டமை தொடர்பில், ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

தனது சுய புத்தியில் ஒரு கட்சியின் பாராளுமன்ற உறுப் பினர், தனது பிரேரணையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க இருந்தார்.

ஆனால், அவர் ஒரு நாட்டின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்றவாறு செயற்பட்டதன் காரணமாக, அந்த நாடு, அந்தப் பிரேரணையை கொண்டு வர விரும்பவில்லை. அதிலிருந்து ஒன்றை நாங்கள் புரிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது. அதாவது, அந்தக் கட்சியினர் யாருடைய நிகழ்ச்சி நிரலின் கீழ் செயற்படுகின்றார்கள் என்று.

இனி வரும் காலங்களில் நாங்கள் யாரையும் நம்ப முடியாது. ஏனென்றால், ஒவ்வொருவரும் ஒவ்வொருவருடைய நிகழ்ச்சி நிரலில் செயற்படுகின்றார்கள். அவர்கள் மக்கள் மீது நம்பிக்கையாகவும் விசுவாசமாகவும் செயற்படுபவர்களாக இருந்தால், எந்தவொரு நாட்டுக்கும் எந்தவொரு கட்சிக்கும் அடிபணியாது சுய புத்தியில் செயற்படவேண்டும்

பிரேரணை பாராளுமன்றத்தில் கொண்டு வரவில்லை. எனவே, அந்தக் கட்சியினர் இந்திய அரசின் நிகழ்ச்சிநிரலில் செயற்படுகிறார்கள் என்பதை உறுதியாக நம்ப வைக்கின்றது-என்றார். (அ)

## அரச தாதியர்...

பிறப்பிக்கக் கோரி வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

சட்டமாஅதிபர் திணைக்களம் நீதிமன்றத்தில் முன்வைத்த விடயங்களை ஆராய்ந்தபோதே நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

இந்த தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக வைத்தியசாலைகளில் நோயாளர் பராமரிப்பு சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் சார்பில் மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல், ஜனாதிபதி சட்டத்தரணி விக்கும் டி ஆப்ரூ நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டினார்.

இதனையடுத்து, கொழும்பு நீதவான் அருண அளுத்கே இடைக்கால தடையுத்தரவை பிறப்பித்துள்ளார்.

தாதியர்கள், நிறைவுகாண் மருத்துவ சேவைகள், மேலதிக வைத்திய சேவை உள்ளிட்ட 18 சுகாதார தொழிற்சங்கங்கள் இணைந்து ஆரம்பித்துள்ள பணிப் பகிஷ்கரிப்பு நான்காவது நாளாக நேற்றும் தொடர்ந்தது. (அ)

## கிடைக்கும்...

நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

குருநாகலில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் மேலும் கூறியவை வருமாறு:

மஹிந்த ராஜபக்ஷ என்பவர் தேர்தலுக்கு அஞ்சும் தலைவர் கிடையாது. முன்கூட்டியே தேர்தலை நடத்தித்தான் பழக்கம். எனவே, தேர்தலை பிற்போடும் எண்ணம் அரசுக்கு இல்லை. கிடைக்கும் முதல் சந்தர்ப்பத்திலேயே தேர்தல் நடத்தப்படும். அது எந்த தேர்தலாக இருந்தாலும் நாம் வெற்றிகரமாக எதிர்கொள்வோம்.

தேர்தல் என்பது மக்களின் ஜனநாயக உரிமை. அதனை அவர்களுக்கு வழங்க வேண்டும்-என்றார். (அ)

## பயங்கரவாத சட்ட...

பரிசீலிக்கப்படுமா என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் எம்.பியுமான ரவூப் ஹக்கீம் அமைச்சர் பீரிஸிடம் கேள்வி எழுப்பி னார்.

இதேநேரம், பயங்கரவாத தடைச் சட்டம் முற்றாக நீக்கப்படும் என நீதியமைச்சர் தெரிவித்திருந்ததை மேற்கோள்காட்டி ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்த நிலையில், வெளிவிவகார அமைச்சர் ஏன் இந்த சட்டமூலத்தை முன்வைத்தார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் கேள்வி எழுப்பினார்.

எனினும், இவர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்காத வெளிவிவகார அமைச்சர் ஜீ. எல். பீரிஸ், சட்டமூலத்தை முதலில் சமர்ப்பித்து பின்னர் விவாதிப்பதே நடைமுறை. சட்டமூலம் மீது விவாதம் நடத்தப்படும்போது விமர்சனங்களை முன்வைக்க முடியும். சபையின் நிலையியல் கட்டளைகளுக்கு அமைவாகவே இந்த சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எந்தவொரு பிரஜையும் இந்த சட்டமூலத்தை சவாலுக்கு உட்படுத்தி உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்ய முடியும். அரசாங்கம் உச்ச நீதிமன்றத்தின் தீர்மானத்திற்காக காத்திருக்கிறது. உரிய நடைமுறையை அரசு கடைப் பிடிக்கும் - என்று பதிலளித்தார்.

ஈழநாடு
Eelanadu

# சுகாதாரத் துறையினரின் போராட்டம் தொடர்கிறது

## பெரும் ஆர்ப்பாட்டத்துக்கும் திட்டம்

கொழும்பு, பெப். 11

தாதியர்கள், நிறைவுகாண் மருத்துவ சேவைகள், மேலதிக வைத்திய சேவை உள்ளிட்ட 18 சுகாதார தொழிற்சங்கங்கள் இணைந்து ஆரம்பித்துள்ள பணிப்பகிஷ்கரிப்பு நான்காவது நாளாக நேற்றும் தொடர்ந்தது.

இந்த வேலைநிறுத்த போராட்டத்தால் நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் சேவைகளுக்கு பெருமளவான வைத்தியசாலைகளில் பெரும் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

தமக்கான தீர்வுகள் துரிதமாக வழங்கப்படாவிட்டால் ஓரிரு தினங்களில் சகல சுகாதார ஊழியர்களையும் கொழும்பில் ஒன்றிணைத்து பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் தொழிற்சங்கங்கள் எச்சரித்துள்ளன.

மேலும், வைத்தியசாலைகளில் மருந்து விநியோகிக்கப்படாமையால் அரச ஒசுசலவில் மருந்துகளைப் பெற்றுக்கொள்வதில் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருப்பதையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

சம்பள முரண்பாட்டுக்கான தீர்வு உள்ளிட்ட 7 கோரிக்கைகளை முன்வைத்து தாதியர் சேவை, முழு நேர மற்றும் இடைக்கால சுகாதார சேவை என்பவற்றை உள்ளடக்கிய 18 தொழிற்சங்கங்கள் இணைந்து கடந்த திங்கட்கிழமை முதல் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளன.

இதன் காரணமாக கடந்த திங்கட்கிழமை முதல் சகல அரச வைத்தியசாலைகளிலும், அரச மருந்துவ நிறுவனங்களிலும் சகல மருந்துவ சேவைகளும் ஸ்தம்பித்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இடுப்பு தெரியும் சேலை ஒழுக்கமான ஆடையா?

## ஐக்கிய காங்கிரஸ் சர்ச்சை கேள்வி

கல்முனை, பெப். 11

திருகோணமலை சண்முகா பாடசாலையின் அதிபர் ஊடகங்களின் முன்னிலையில் ஆசிரியை பஹ்மிதா அணிந்த ஆடை ஒழுக்க விழுமியமற்ற ஆடையாக அபயாவை தெரிவித்தார். உடலை முழுவதுமாக மூடும் அபயா ஒழுக்கமான ஆடையாக இல்லாது விட்டால் அவர் கூறவரும் ஒழுக்கமான ஆடை ஜன்னல் வைத்த ஜாக்கட்டும் இடுப்புத் தெரியும் சேலையுமா அல்லது குட்டை பாவாடை யையா? என்று கேட்டுள்ளார் ஐக்கிய காங்கிரஸின் தலைவர் மௌலவி முபா ரக் அப்துல் மஜீத்.

நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் கூறுகையில்,

திருகோணமலை சண்முகா பாடசாலையின் உள்ளே சென்றால் பெண் பிள்ளைகள் அவர்களின் தலையை மறைத்து அணியும் ஆடையான முக்காட்டை கழற்றிவைத்துவிட்டு செல்லவேண்டும் என்பதாக அறிகின்றோம். அது மனிதாபி மானமற்ற, இன வாத செயல்பாடாகும். அது ஒரு தேசிய பாடசாலை. இலங்கை அரசினால் அப்படியான சட்டம் எந்த பாடசாலையிலும் அமுலில் இல்லை. தொப்பி போடக்கூடாது, தலையை மூடக்கூடாது என்று சுற்றுநிருபங்கள் வெளிவந்ததாக எனக்கு தெரியாது.

கடந்த காலங்களில் தமிழ் பெண்கள் பொட்டு வைக்கக்கூடாது என்ற நடை முறைகளை சிலர் கூறியதும், காரைதீவில் வைத்து முஸ்லிங்களின் தொப்பிகளை கழற்றிய வரலாறுகளும் இருக்கின்றன. ஒரு தமிழ் சகோதரி தன்னுடைய பொட்டை கலைத்தால் எப்படி கூச்சப் பட்டு கூனிக் குறுகிப்போவாளோ அது போன்றுதான் முஸ்லிம் பெண்ணும் தன்னுடைய ஆடை கலாசாரத்தில் கைவைத்தால் கூனிக் குறுகிப் போவாள். இப் படியான நடைமுறைகள் மனிதாபி மான மற்ற இனவாத சிந்தனை கொண்டவை. இதனால் நாட்டுக்கும், சிறுபான்மை சமூகத்திற்கும் ஆபத்து உள்ளது. (ஐ)

சண்முகா இந்து மகளிர் கல்லூரி விவகாரம்

# ரவூப் ஹக்கீமை நேரில் சந்தித்தார் ஆசிரியை

திருமலை, பெப். 11

திருகோணமலை சண் முகா இந்து மகளிர் கல் லூரி ஹபாயா சர்ச்சை யில் பாதிக்கப்பட்ட ஆசிரியை பஹ்மிதா ரமீஸ் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங் கிரஸ் தலைவர் ரவூப் ஹக் கீமை சந்தித்துள்ளார். இச்சந்திப்பு கட்சித் தலைமையகம் தாருஸ்ஸலாமில் இடம்பெற்றது.

இதன்போது பாதிக் கப்பட்ட ஆசி ரியை நீதிமன்றத்தை நாடிய போது மீண்டும் அதே பாடசாலைக்கு பணியமர்த்தியமை தொடர்பில் ஆரா யப்பட்டதுடன், மேல் நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் தற்போதைய நிலவரம், மாகாணக் கல்வி அமைச்சினால் அனுப் பப்பட்டுள்ள கடிதங்கள் தொடர்பில் ஆராயப்பட்டதுடன், இது தொடர்பில் தொலைபேசி ஊடாக மாகாண கல்விப் பணிப்பாளருடன் பேசப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. இக்கலந்துரையாடலின் போது கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பை கலந்து கொண்டதும் குறிப்பிடத்தக்கது.

# கோபா குழுவின் தலைவராக திஸ்ஸ விதாரண தெரிவானார்!

கொழும்பு, பெப். 11


ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடருக்கான அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் (கோபா) தலைவராகப் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவுசெய்யப்பட்டார்.

பாராளுமன்ற வளாகத்தில் நேற்றுக் கூடிய அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவில் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரணவின் பெயரை முன்மொழிந்ததுடன், பாராளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்ஹ வழிமொழிந்தார்.

பேராசிரியர் திஸ்ஸ விதாரண ஒன்பதாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் தலைவராகக் கடமையாற்றியிருந்தார். பாராளுமன்றத்தின் 119 (1) நிலையியல் கட்டளைக்கு அமைய இந்தக் குழுவுக்கான உறுப்பினர்கள் அண்மை யில் தெரிவுக்குழுவினால் நியமிக்கப்பட்டனர்.

இதன்படி, அமைச்சர் உதய கம்மன்பில, இராஜாங்க அமைச்சர்களான துமிந்த திஸாநாயக்க, தயாசிறி ஜயசேகர, லசந்த அழகியவன்ன, வைத்தியகலாநிதி சுதர்ஷினி பெர்னாந்துபுள்ளே, ஷெஹான் சேமசிங்க, பிரசன்ன ரணவீர, பாராளுமன்ற உறுப்பினர்களான திஸ்ஸ அத்தநாயக்க, ஹரின் பெர்னாந்து, நிரோஷன் பெரேரா, அஸோக அபேசிங்ஹ, புத்திக பத்திறண, கே. காதர் மஸ்தான், மொஹமட் முஸம்மில், சிவஞானம் சிறீதரன், ஹேஷா விதானகே, மருத்துவர் உபுல் கலப் பத்தி, பீ.வை. ஜீ. ரத்னசேக்கர, வீரசுமன வீரசிங்ஹ, பேராசிரியர் ரஞ்சித் பண்டார, கலாநிதி ஹரினி அமர சூரிய ஆகியோர் ஏனைய உறுப்பினர்களாவர். (ஐ)

# மரண அறிவித்தல்



## யோசப் பிரான்சிஸ்

(கலைக்குரிசில், சமூக திலகம்)

நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட யோசப் - பிரான்சிஸ் (கலைக்குரிசில், சமூக திலகம்) கடந்த 08.02.2022 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலு யோசப் - அனாசி ரட்ணம் மண இணையரின் அன்பு மகனும் வைத்தி இன்னாசி - சொர்ணம்மா மண இணையரின் அன்பு மருமகனும் பிறதர் சந்தியாவின் பெறாமகனும் தங்கமலர் மரியபுஸ்பம் அவர்களின் அன்புக்கணவரும் செல்வி (நோர்வே), ஷகிலா(நோர்வே), அநுரா (யாழ். பொது நூலகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அன்ரனி ஸ்ரீதர் (நோர்வே), யூலியஸ் நிமல் (நோர்வே), யசிதரன் (ஷால்பன் வீடியோ), ஆகியோரின் அன்பு மாமனாரும் யுலைன், சுபேட்ஸ், நிகிந், இன்பன்ரா, நிம்பிரான்சன் (நோர்வே), ஷால்பன், சரோன், சாய்ஷா ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான யோசப் யேசுதாசன், அருளானந்தம், திரேசம்மா, லூர்த்தம்மா, குலமணி மற்றும் சந்தியோ ஆகியோரின் உடன் பிறப்பும், காலஞ்சென்றவர்களான பூமணி, ராசம், அந்தோனிமுத்து, பொன்ராசா, பூபதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்றவர் களான சலேற், அல்பிறற், பட்டுத்துரை, நசரேத், சந்திரா, பிளாஞ்சாட், மற்றும் இரஞ்சிதம் தறுமு, லீலா, ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் காலஞ்சென்ற வர்களான மி. நீக்கிலஸ், அ. சயினம்மா, ச.ராசாத்தியம்மா, இ. நீக்கிலஸ், அ. பாக்கியராசா, மற்றும் ந. லில்லி, த. வசந்தமலர் ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிப் பயணம் நாளை (12.02.2022) சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு இல. 6/5 மூன்றாம் குறுக்குத்தெரு வீதி, நாவாந்துறை வடக்கு, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இருந்து பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்டு சென். மேரிஸ் சனசமூக நிலையத்தில் இடம்பெறும் அஞ்சலி நிகழ்வின் பின்னர், புனித பரலோக மாதா ஆலயத்தில் இரக்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நாவாந்துறை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு : 077 066 6014, 077 326 6533

தகவல்: குடும்பத்தினர்










இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 11.02.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திபாடல்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்கள்
7.05 மணி : உளவியல் கருத்து-உளவள துனையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை- நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : கச்சேரி ஆரம்பம்-மறுஒளிபரப்பு

பகல்
12:00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00மணி : துறைக்கு அப்பால் (மறுஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-சத்தியம்,சிந்துபாத் திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : Short Film
6.00 மணி : ஹோலிவூட் சுப்பர்-10

இரவு
7.00 மணி : ரசிகன் என்கின்ற தலைவன்- நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம்- அங்காடிகள் பகுதி-02




10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள் (மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: ஜெபங்கேளும் திருகோணமலை நிகழ்ச்சி
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : அன்பியம் சனி மறுஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (யாழ்ப்பாணம்)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (யாழ்ப்பாணம்)

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்